# சட்டமும் நீங்களும்

# (LAW AND YOU)

9

**குடியியல் சட்ட விளக்கங்கள்**

**Understanding the Civil Laws**

**பிரிவிடல் சட்டம்**

**தொகுப்பாக்கம்:**

**K.G. John**

**ATTORNEY-AT-LAW**

**இலவச வெளியீடு:**

**மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,**
**இல: 238, உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை.**

# முன்னுரை

‘‘சட்டமும் நீங்களும்’’ எனும் 7ஆம்,8ஆம் புத்தகங்கள் ஏற்கனவே வெளியாகி வாசகர்களின் கைகளில் உலவி வருகின்றது. வாசகர்கள் இச்சிறு கைநூல்களில் காட்டும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் CPPHR மிகவும் வரவேற்கின்றது. இனி தொடர்ந்து வெளிவரவிருக்கும் இவ்வருடத்திற்குரிய கைநூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவியை வழங்கிக் கொண்டிருக்கும் USAid – SPICE நிறுவனத்திற்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வருடம் ‘‘சட்டமும் நீங்களும்’’ என்ற கைநூல்கள் குடியியல், குற்றவியல் பற்றிய சில கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவரவுள்ளன. அதனுடைய முழுநோக்கமும் பொதுமக்களிடையே சட்டஅறிவையும் விழிப்புணர்வையும் வெளிப்படுத்துவதேயாகும்.

இவ்வருட கைநூல்களில் வெளிவரவுள்ள ஆக்கங்களை தொடர்ந்தும் சட்டத்தரணி K.G.John அவர்கள் வழங்க உள்ளார். சட்டத்தரணி K.G.John அவர்கள் வீரகேசரி பத்திரிகையின் வாசகர்களுக்கு புதியவர் அல்ல. சட்டம் பற்றிய அவருடைய கருத்துக்கள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் வீரகேசரி பத்திரிகையில் வெளிவருகின்றன.

அக்கட்டுரைகளை தொகுத்து கைநூல் வடிவமைப்பில் வெளியிடுவதற்கு அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்கிய சட்டத்தரணி K.G.John அவர்களுக்கு CPPHR தன்னுடைய முழு நன்றியையும் கூறுகின்றது. பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகள் நாளடைவில் வாசகர்களின் கையிலிருந்து நழுவிப் போவது சகஜமே. எனவே கட்டுரை ஆசிரியரின் நோக்கத்தையும் கருத்திலெடுத்து கைநூல் வடிவில் வடிவமைத்து வாசகர்கள் நீண்ட தூரப்பயனடைவதற்கு எம்முயற்சி வழிவகுக்கும் என நம்புகின்றோம். விஷேட விதமாக வீரகேசரி பத்திரிகை ஆசிரியர் தன்னுடைய பத்திரிகையின் ஊடாக சட்டத்தரணி K.G.John அவர்களுடைய ஆக்கங்களை வெளியிட்டு பொது மக்களுக்கு விலைமதிக்க முடியாத சேவையினை ஆற்றுகின்றமைக்கு CPPHR தன்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

இக்கைநூல்கள் ஆர்வம் மிக்க வாசகர்களுக்கும் பொது நல சேவையாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இவைகள் நூலகங்கள், சட்டமாணவர்கள், சட்டவிழிப்புணர்வுகளை கொண்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இவைபோன்று பொதுநல எண்ணக்கருத்துக்களை கொண்ட நிறுவனங்களையும் வாசகர்களையும் சென்றடைவதே எமது நோக்கமாகும்.

இக்கைநூல்கள் கிடைக்கும் இடம்:- மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல. 238, உட்துறைமுக வீதி, திருகோணமலை.
தொலைபேசி எண்: 026-3260895.
E-mail: cpphrtrinco@gmail.com.

**‘‘அறிவு உன்னை விடுவிக்கும்’’**

# Foreward

Already "Law & You" booklets Nos. 7 and 8 had been released and it is in circulation.

CPPHR is appreciative for the support and enthusiasm shown by the readers of "Law & You". The grant has been approved by USAid – SPICE to continue the publication of the next series.

The aim is to enhance awareness and knowledge of law among people.

Mr. K.G. John will continue to contribute in the writing of articles pertaining to criminal and civil laws.
Mr. K.G.John, Attorney – at – Law is the author for this series. Mr. K.G. John is well known among the readers of Virakesari, the Tamil daily News Paper. His articles on law features on Wednesdays in the Virakesari.

CPPHR is ever grateful to Mr.K.G. John for his full support in granting permission to bring in his articles in booklet forms which have already been published. Since, the news paper articles usually tend to get lost easily, the booklet form will be much more effective to carry foreward the intention of the author. CPPHR appreciates the Editor, Virakesary who had been providing this valuable service to the public.

These booklets will be distributed free of charge to all who are interested. It will reach libraries, law students, NGOs working in law awareness programmes and like minded organizations etc.

.

The booklets will be available at,
Centre for Promotion & Protection of Human Rights, 238, Inner Harbour Road, Trincomalee.
Phone No. 026-3260895. E-mail: cpphrtrinco@gmail.com.

**"knowledge sets you Free"**

# பொருளடக்கம்

## 01. பிரிவிடல் சட்டம்

**காணி வழக்குகளில் ஒன்றாகக் கருதப்படும் பிரிவிடல் தொடர்பில் அறிய வேண்டிய முக்கிய விடயங்கள்**

**பிரிவிடல் வழக்கு ஆரம்ப நில அளவையும் தொடர் நடவடிக்கைகளும்.**

**பிரிவிடல் வழக்கு விளக்கம்**

**இடைக்கால தீர்வை**

# பிரிவிடல் சட்டம்

## காணி வழக்குகளில் ஒன்றாகக் கருதப்படும் பிரிவிடல் தொடர்பில் அறிய வேண்டிய முக்கிய விடயங்கள்

### சட்டத்தைப் பற்றி நீங்கள் அறிய வேண்டியவை

இலங்கையில் நடைபெறும் காணி வழக்குகளில் முக்கியமானவையாக கருதப்படுபவை உரித்து நிறுவல் வழக்கு உடமை வழக்கு, பிரிவிடல் வழக்கு என்பனவாகும். இவற்றில் பிரிவிடல் வழக்கு தனித்தன்மை வாய்ந்ததாகும். ஏனெனில் இந்த வழக்கில் பலர் காணிச் சொந்தக்காரராக இருப்பர். ஆனால் ஒவ்வொருவரிடமும் தனித்தனி உறுதி இருக்க மாட்டாது. இருந்தாலும் அது பிரிக்கப்படாத காணியின் பங்கைக்குறிப்பதாகவே இருக்கும்.

ஆகையால் ஒருவருக்கு அக்காணியிலுள்ள உரிமையைப் போல் மற்றவர்களுக்கும் உரிமை இருக்கும். அதாவது அக்காணியின் ஒவ்வொரு அங்குலமும் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக இருக்கும். அந்த காணியில் ஒருவர் உடமையிலிருந்து ஆட்சி செய்வதால் அவர் மற்றவர்களுக்காகவும் உடமை செய்கின்றார் என்றே சட்டம் கூறும். ஒருவர் தனது பங்கை மற்றவர்களின் சம்மதத்துடனேயே விற்க வேண்டும் இல்லையேல் வாங்குபவர் கஷ்டப்பட இடமுண்டு. இவ்வாறு பல இலட்சங்களை கொண்ட காணிதான் பிரிவிடல் வழக்கிற்கு உட்படுகிறது. எனவே ஏனைய வழக்குகளை போல் வழக்காளிக்கு வழக்குத்தாக்கல் செய்ய எதிராளிகளோ வழக்கெழு காரணமோ இருப்பதில்லை. ஆயினும் பிரிவிடல் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற நீதிமன்ற நடவடிக்கை அதாவது தீர்ப்பை பெற நடைமுறையில்

சிவில் நடவடிக்கை முறை கோவையைப் போல் பிரிவிடல் நடவடிக்கைக்கும் சில நடவடிக்கை முறைகள் இருப்பதால் நடைமுறையில் வழக்கின் பிராதில் வழக்காளிகள் எதிராளிகள் என்ற முகப்பும் வழக்கெழு வினாக்களும் நீதிமன்றங்களில் எழுப்பப்பட்டு பிரிவிடல் வழக்கு நடைபெறுகிறது என்று கூறலாம். இவ் வழக்கிற்கு தேவையானது என்னவெனில் சம்மந்தப்பட்ட காணிக்குச் சொந்தக்காரரானவர்கள் தொடர்ந்தும் அந்தக் காணியை கூட்டாக பரிபாலிக்க முடியாமல் இருக்கும் சூழ்நிலையாகும் இதனாற்தான் பிரிவிடல் வழக்கு ஒன்று தள்ளுபடி செய்யப்பட்டாலும் மீண்டும் மீண்டும் அவ்வழக்கை தாக்கல் செய்ய சம உரிமை வழங்கப்பட்டுள்ளது என்று *அபயசுந்தர எதிர் பமுணா* என்ற வழக்கில் தீர்க்கப்பட்டது.

அவ்வழக்கில் கூறப்பட்டது என்னவெனில், தெடர்ந்தும் ஒரு காணியை கூட்டுச்சொந்தக்காரர்கள் ஒற்றுமையாக பாவிக்க முடியாத நிலைமை அடிக்கடி ஏற்படிக்கூடியதொன்று என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகும். ஆகவே பிரிவிடல் வழக்கை படிப்பது எல்லோருக்குமே பயனுள்ளதாகும்.

**பிரிவிடல் வழக்கை யார் தாக்கல் செய்யலாம்? ஏன் தாக்கல் செய்ய வேண்டும்?**

ஒரு காணிக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூட்டு சொந்தக்காரர்களாக இருப்பின் அவர்கள் அக்காணியை தமக்குள் பிரித்துக்கொள்ள அல்லது அக்காணியை விற்பனை செய்ய அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்வழக்கை தாக்கல் செய்யலாம். இவ்வழக்கை ஒருவர் அல்லது பலர் வழக்காளிகளாக இருந்து தாக்கல் செய்யலாம்.

இவ் வழக்கை தாக்கல் செய்வதன் நோக்கத்தை *சிலோன் தியேட்டர் லிமிட்டட் எதிர் சினிமாஸ் லிமிட்டட்* என்ற வழக்கில் பிரபுக்கள் சபை பின்வருமாறு கூறியது கவனிக்கத்தக்கது.

''காணியை பிரிவிடல் செய்யக்கோருவது அல்லது விற்பனைக்கு அனுமதி கோருவதன் நோக்கம் கூட்டுச் சொந்தத்தில் உள்ள பங்கை தனிப்பங்காக பிரித்து கூட்டுச் சொந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதேயாகும்'' என்றாகும். பிரிவிடல் வழக்கை தாக்கல் செய்யும் கூட்டுச் சொந்தக்காரர் அக்காணியில் உடமையில் இருக்க வேண்டும் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டாலும் பின்னர் அத்தேவை அவசியமில்லை என தீர்க்கப்பட்டுள்ளது.

ஆகவே உடமையில் இல்லாதவரும் காணியில் உரிமை இருந்தால் அக்காணியின் பிரிவிடல் வழக்கை தாக்கல் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரிவிடல் வழக்கை தாக்கல் செய்வதற்கு நீங்கள் ஆயத்தமாக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? ஏன் செய்ய வேண்டும்?

பிரிவிடல் வழக்கு பல வருடகாலம் நீடிப்பதற்கு காரணங்களாக இருப்பவற்றுள் ஒன்று என்னவெனில் வழக்கை தாக்கல் செய்வதற்கு தேவையான தகவல்கள் அனைத்தையும் சட்டத்தரணிக்கு தரப்பினர் வழங்காமல் இருப்பதும் குறைபாடுகளுடன் கூடிய தகவலின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்வதுமேயாகும். சகல தகவல்களையும் வழங்கி வழக்கை தாக்கல் செய்தால் விரைவில் தீர்வைப் பெறலாம். நீங்கள் வழங்க வேண்டிய தகவல்கள் யாவை என பார்ப்போம்.

**அ) பிரிவிடல் செய்யப்போகும் காணிக்கு பெயர் ஒன்று இருப்பின் அப்பெயர், காணியின் விலாசம், பெறுமதி.**

இவ்விடத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அக்காலத்தில் காணிகளுக்கு பெயர் இருப்பது வழக்கம். அப்பெயர்கள் பழைய உறுதியில் கட்டாயம் இருக்கும். மற்றையது காணிக் கந்தோரில் உள்ள பதிவேட்டிலும் இருக்கும். ஆகவே, காணியின் பெயரை பெறுவது கஷ்டமாக இருக்காது. உங்களிடம் இல்லாவிட்டாலும் உள்ளூராட்சி சபைகளிடம் இருக்கலாம். அவற்றை பெற்றுக்கொள்ளலாம். பெறுமதியைப் பொறுத்தவரையில் அன்றைய பெறுமதிக்கும் இன்றைய பெறுமதிக்கும் பாரிய வித்தியாசமுண்டு. ஆகவே சந்தை பெறுமதியாக எடுக்கலாம். பலர் காணி ஒன்றின் பெறுமதியை குறைத்துக் கூறுவதற்கு காரணம் அரசுக்கு செலுத்த வேண்டிய முத்திரை வரியை குறைக்கவேயாகும். ஆனால் பிரிவிடல் வழக்கிற்கு முத்திரை வரியில்லை. ஆகவே பயமில்லாமல் சந்தை பெறுமதியை கூறலாம். விசாலத்தை பொறுத்தவரையில் பழங்கால உறுதிகளில் நீள அகலம் எண்ணளவில் இருப்பதும் உண்டு. சில உறுதிகளில் விளைச்சலின் அளவிலும் இருக்கும். உதாரணமாக ஒரு காணியின் விளைச்சலை கொண்டு பின்வருமாறு சொல்லியிருக்கலாம்.

70 1/2 மரைக்கால் விசாலம் என்று கூறியிருக்கலாம். அல்லது 15 ஏக்கர் 10 ஏக்கர் என்று ஏக்கர் கணக்கில் கூறியும் இருக்கலாம். அல்லது 330 யார் நீளம் 160 யார் அகலம் என்று கூறியிருக்கலாம். இவற்றை சரியாக கணித்து காணியின் விசாலத்தை கூற வேண்டும் சிறுவேறுபாடு இருந்தாலும் பரவாயில்லை.

ஆ) காணியின் அமைப்பைக் காட்டும் வரைபடம். இது கட்டாயமாக தொழில்திறன் மிக்கவர்களான நில

அளவையாளர்கள் மூலம் எடுக்க வேண்டுமென்ற கட்டளையில்லை இந்த காணியைக் கண்டுபிடிக்க கூடியவாறு நீங்களே வரைபடத்தை கீறிக்கொடுக்கலாம் வீதியிலிருந்து எவ்வாறு இக்காணிக்கு செல்வது என்று காட்டுவது மிகப் பயனுடையதாகும்.

இ) பிரிவிடல் செய்யவிருக்கும் காணிக்கு உரித்தானவர்கள், மேலும் அக்காணி முழுவதற்கும் அல்லது பகுதிக்கு அபிவிருத்தி செய்தவர்கள் இருப்பின் அவர்களது பெயரும் விலாசமும் வழக்காளியின் சொந்த அறிவுக்கு அல்லது வழக்காளி தெரிந்து கொண்ட தகவல்களால் பெறப்பட்டவர்கள் யாராவது அக்காணிக்கு உரித்துக்கோரக் கூடியவர்களாக இருப்பின் அவர்களை பற்றிய விபரமும் அவர்கள் அக்காணியை அபிவிருத்தி செய்திருந்தால் அவர்கள் அபிவிருத்தி செய்த பகுதியின் விசாலம் அபிவிருத்தியின் தன்மை என்பனவற்றை அடக்கிய அறிக்கை ஒன்று தயாரிக்க வேண்டும்.

ஈ) இக்காணிக்கு வழக்காளி எவ்வாறு உரித்தாளர் ஆகிறார் என்பதை காட்டும் பரவணிப்பட்டியல் முடியுமானால் வழக்கில் ஏனைய தரப்பாராக குறிக்கப்படும் நபர்களது பரவணிப்பட்டியல் என்பனவற்றை எடுத்துக்காட்டும் அறிக்கை ஒன்றும் தயாரிக்க வேண்டும்.

உ) வழக்கை தாக்கல் செய்யும் வழக்காளி வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது காலமாகிவிட்டால் அவருக்கு பதிலாக அந்த வழக்கை கொண்டு நடத்துவதற்கு வழக்காளியால் நியமிக்கப்படும் சட்டபூர்வ பிரதிநிதி மூவரின் பெயர்கள் கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும். அந்த பிரதிநிதி நியமனம் இல்லாமையால் தான் பிரிவிடல் வழக்கில் இறந்த

ஒருவருக்கு எதிரான பதிலீடு செய்வதில் முன்னைய காலத்தில் பாரிய சுணக்கம் ஏற்பட்டது. சிவில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் கீழ் உள்ள நடவடிக்கைகளை பின்பற்றியே அக்காலத்தில் பதிலீட்டுக்குரிய நியமனங்கள் செய்யப்பட்டன. இதன் சுணக்கத்தை உணர்ந்த அரசாங்கம் 1997ஆம் ஆண்டு பிரிவிடல் சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் கீழ் மேற்படி புதிய பிரிவை புகுத்தி வழக்கை தாக்கல் செய்யும் போதே வழக்காளி சட்டப்பிரதிநிதியையும் தாக்கல் செய்யவேண்டும் என்று கட்டாய விதியை உண்டாக்கியுள்ளது.

81 ஆம் பிரிவில் காணப்படும் இவ்விதி வழக்காளியை மட்டுமல்ல வழக்கில் சம்மந்தப்படும் சகல தரப்பினரையும் கட்டுப்படுத்துகிறது. வழக்கில் சம்மந்தப்படும் தரப்பார் பின்வருவோர்களாவர்.

அ) வழக்காளிகள்

ஆ) எதிராளிகள்

இ) நிலஅளவையாளரால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள தரப்பார்.

ஈ) நீதிமன்றத்தினால் 69ஆம் பிரிவின் கீழ் பெயர் குறிக்கப்பட்ட தரப்பார் ஆகியோர் அனைவரும் தமது சட்டப் பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும். இந்நியமனம் கட்டாயம் செய்யவேண்டும். இல்லையேல் பிரிவிடல் வழக்கை கொண்டு நடத்தவது கஷ்டம் ஒவ்வொருவரும் மூன்று ஆட்களை நியமிக்க வேண்டும் நியமனம் செய்யப்படுபவர்கள் தமது சம்மதத்தை சத்திய உரை மூலம் தெரிவிக்க வேண்டும். அதில் சட்டத்தரணி கையொப்பம் இடவும் வேண்டும். இந்த ஏற்பாடு புதிய

ஏற்பாடு. ஆதலால் பல பிரிவிடல் வழக்குகள் கொப்பி பண்ணியே தயாரிக்கப்படுவதால் இந்த ஏற்பாட்டில் உள்ள விதியை கவனிப்பதில்லை இந்த விதியை உடனடியாக செய்ய வேண்டும் என்றும் இதைக் கூட்டாக வைத்து வழக்கை விளக்கத்தில் இருந்து இடை நிறுத்தி அழைப்பு பட்டியலுக்கு மாற்றக் கூடாது என்றும் 81 ஆம் பிரிவின் 10 ஆம் உபபிரிவு (ஆ) பின்வருமாறு கூறுகிறது. சட்டபிரதிநிதி நியமனத்திற்காக வழக்கின் விளக்கத்தையோ வழக்கின் ஏனைய விடயங்களையோ பிற்போட காரணமாக அமையக் கூடாது.

ஆயினும் இறந்தவரின் சட்டப்பிரதிநிதி இல்லாமல் வழக்கை கொண்டு நடத்தமுடியாது என்று நீதிமன்றம் கருதினால் ஏனையவர்களுக்கு வழக்குச் செலவை செலுத்துமாறும் அதன் பின்னர் வழக்கை பின்போடுமாறும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என அப்பிரிவு கூறுகிறது.

இனி மேலேயுள்ள தகவல்கள் எவ்வாறு பிரிவிடல் வழக்கில் உதவுகின்றது என பார்ப்போம்.

1. வழக்காளிக்கு எவ்வாறு உரிமை வந்தது என்பது தெரிவதற்கு.

2. பிரிவிடல் செய்யவிருக்கும் காணியின் உரித்தாளர்கள் மற்றும் அவ்வழக்கில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் அனைவரையும் சேர்க்காமல் தமது பகுதிக்கு மட்டும் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என அறிவதற்கு (அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படும் பிரிவிடல் வழக்கு முழுக்காணிக்குமே

செய்யப்பட வேண்டும் ஒரு பகுதிக்கு மட்டும் செய்யமுடியாது).

3. பிரிவிடல் செய்யவிருக்கும் காணிக்கு விஸ்வென்டன் பதிய நீதிமன்றுக்கு உதவி செய்வதற்கு,

4. வழக்காளியால் வழக்கில் தனது உரித்தை நிரூபிக்க முடியாமல் போனால் ஏனையவர்களில் தமது உரித்தை நிரூபித்தவர்களை வழக்காளியாக்கி வழக்கின் தீர்வையை வழங்குவதற்கு,

5. இடைக்கால தீர்வைக்கு பின்னர் வழக்கிற்குள் ஒருவர் நுழையாமல் இருப்பதற்கு (உயர் நீதிமன்றங்களின் கட்டமைப்பின் படி நுழையலாம்).

6. புதிய பிரிவான 81 ஆம் பிரிவின்படி வழக்கு சுணக்கமில்லாமல் நடைபெறுவதற்கு இவைபோன்ற நன்மைகள் வழக்குத்தாக்கல் செய்ய முன்பு பெறும் தகவல்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

## பிராதில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்

பிராதில் எல்லோரையும் சேர்த்த பின்னர் வழக்கை நடத்த வேண்டும் என்று சிலர் கூறுவதுண்டு. இது நடைமுறைக்கு சாத்தியமில்லை. ஏனெனில் பிராது சமர்ப்பித்த பின்னர் தான் நில அளவையாளர் காணியை அளக்கச் செல்ல வேண்டும். அவர் காணியை அளக்கும் போது பிராதில் பெயர் இல்லாத பலர் நில அளவையாளரிடம் வந்து தமக்கு அக்காணியில் உரித்துண்டு என்று கூறி தம்மையும் சேர்க்குமாறு கேட்பதுண்டு. கட்டாயம் நில அளவையாளர் அவர்களை நீதிமன்றிற்கு வருமாறு

கூறவேண்டியிருப்பதுடன் அவர்களுக்கு கொடுக்கும் அறிவித்தல் அழைப்பாணையாக கருதப்பட வேண்டும் என சட்டம் கூறுகின்றது.

ஆகவே பின்னர் அவர்கள் சேர்க்கப்பட்டு பிராது திருத்தப்பட வேண்டும். எதிராளிகள் அவர்கள் அறிந்த வரையில் யாராவது வழக்கில் சேர்க்கப்படாமல் விடப்பட்டு இருந்தால் அவர்களது பெயர்களை நீதிமன்றத்திற்கு வழங்க வேண்டும். பின்னர் அவர்கள் சேர்க்கப்பட்டு பிராது திருத்தப்படவேண்டும்.

69 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றம் உறுதிகளை பரிசீலனை செய்து வேறு பலரும் வழக்கில் சேர்க்கப்படவேண்டும் என்று கருதினால் பிராது திருத்தப்படவேண்டும். ஆகவே பிராது பல தடவை திருத்தத்திற்கு உள்ளாகிறது. சட்டம் அப்படி கூறும் போது சிலர் சகலரும் பிராதில் பெயர் குறிப்பிட்ட பின்னர் தான் வழக்கு ஆரம்பிக்க வேண்டும் என்று கோருவது கேலிக்குரியதாகும்.

எனினும் வழக்காளி தான் அறிந்த வரையில் வழக்கின் தரப்பாராக சேர்க்க வேண்டியவர்களை பிராதில் சேர்க்கத் தவறக்கூடாது என்பது உண்மையாயினும் அதனை அடிப்படையாக கொள்ளக் கூடாது. எனவே பிரிவிடல் வழக்கில் தீர்வைக்கு முன்னர் பிராது பின்வரும் சந்தர்ப்பங்களில் திருத்தலாம்.

1. எதிராளிகள் தமது உரித்துக் கோரிக்கையை முன்வைக்கும் போது இந்த வழக்கில் தாம் அறிந்த வரையில் சேர்க்கப்பட வேண்டியவர் இருக்கிறார்கள் என்றும் அவர்களது பெயர்கள் முகவரிகளை அவர்கள் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கும் போது ( 19 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் (இ) படி )

2. நில அளவையாளர் காணியை அளக்கும்போது யாராவது அவரிடம் வந்து தம்மையும் சேர்க்க வேண்டும் என்று ஆவணங்களை காட்.டினால் நில அளவையாளர் அதனை ஏற்று அவர்கள் நீதிமன்றத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளும் போது (18 ஆம் பிரிவின் படி )

3. (69 ஆம் பிரிவின்படி) நீதிபதி தான் வழக்கை விளங்கியதிலிருந்து ஆவணங்களை பரிசீலித்ததிலிருந்து ஒருவரை அல்லது பலரை சேர்க்க வேண்டும் என்று கூறும்போது. (1997 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க 25 (1) ம் பிரிவின் படி )

5. ஒருவர் தன்னையும் இவ்வழக்கில் ஒரு தரப்பாராக சேர்க்கவேண்டும் என்று நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டால் பிராது திருத்தப்படும்.

**விசாரணைக்கு முன்னர் நடை பெற வேண்டியவை**

விசாரணைக்கு முன்னர் சில நடவடிக்கைகளை சட்டத்தரணி எடுக்க வேண்டும். அதற்கு தரப்பாரின் ஒத்துழைப்பு அவசியம். சட்டத்தரணி இக்காணி சம்மந்தமான ஒரு அறிக்கையை 12 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்திற்கு கொடுக்க வேண்டும்.

அந்த அறிக்கையுடன் இவ்வழக்கு முடிவுறா வழக்கு (லிஸ்பெண்டன்ஸ்) என காணியின் இதழில் பதிய வேண்டும். இதனைப் பதிந்ததன் பின்னர் இக்காணி சம்மந்தமாக விற்பனை, கொடை, வேறு செயல்களை செய்யக்கூடாது. மேலும் சட்டத்தரணி இந்தக் காணியுடன் தொடர்புடைய புத்தகங்களை பரிசீலனை செய்து அந்த புத்தகங்களில் உள்ள காணியுடன்

தொடர்புடையவர்களின் பெயர்களையும் விலாசம் இருப்பின் அவற்றையும் ஒரு பிரதியில் தயாரித்து பிராதில் அவர்களது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் காட்டவும் வேண்டும். இவ்விடயத்தில் சட்டத்தரணிக்கு சில பிரச்சனைகள் எழுவதுண்டு.

இதழில் உள்ளவர்களின் பெயர்கள் வேறு ஒருவருடையதாகவும் வழக்கு தரப்பாரின் பெயர்கள் வேறாகவும் இருக்கும். இதற்கு காரணம் முன்னையவர் இறந்து பின்னையவர் அந்தக் காணியின் உரித்தாளராக வந்திருக்கக் கூடியதாயிருக்கலாம். இன்னும் சில வேளைகளில் இதழில் உள்ளவர்களின் பெயர் பிராதில் இடம்பெறாமல் இருந்து அவர்கள் கட்டாயம் உரித்தாளராக இருக்கிறார்கள் என்று சட்டத்தரணி தீர்மானித்தால் திருத்திய பிராதை வழங்குவதாக நீதிமன்றத்திற்கு கூறவேண்டும். பிள்ளை அதனைச் செய்ய வேண்டும். வழக்கின் தரப்பாரது மொழி நீதிமன்ற மொழியினின்றும் வேறுபட்டதாக இருந்தால் நீதிமன்ற மொழியில் பிராதை கொடுத்துவிட்டு தரப்பாரின் மொழியில் பிராதின் மொழி பெயர்வையும் கொடுக்க வேண்டும் வழக்கிற்குரிய நில அளவையை செய்வதற்குரிய பணத்தை நீதிமன்றில் வைப்பில் இடவேண்டும்.

வழக்கில் சம்மந்தப்பட்ட காணி அமைந்துள்ள இடத்தில் இந்தக் காணி பிரிவிடல் செய்யப்பட விருப்பதாக அறிவித்தலை நீதிமன்றம் மூலம் செய்ய வேண்டும். வழக்கின் விடயப்பொருளை காணியில் இவ்வழக்கு பிரிவிடல் செய்யப்படவிருப்பதாக அறிவித்தல் ஒன்றை துளம்பரமான இடத்தில் ஒட்டச் செய்ய வேண்டும்.

காணி அமைந்துள்ள இடத்தின் கிராமசேவையாளரின் காரியாலயத்திலும் மேற்படி அறிவித்தல் ஒட்டப்பட

வேண்டும். இவை அனைத்தும் சட்டத்தரணியின் மேற்பார்வையில் நீதிமன்றத்தின் உதவியுடன் செய்ய வேண்டியிருப்பதால் வழக்கின் தரப்பாளர் சட்ட தரணிக்கு செய்ய வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும்.

இவை அனைத்தும் செய்த பின்னர் ஆரம்ப அளவை செய்யப்படும்.



## பிரிவிடல் வழக்கு ஆரம்ப நில அளவையும் தொடர் நடவடிக்கைகளும்.

பிரிவிடல் வழக்கொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் முன்னர் கவனிக்க வேண்டிய விடயங்களைப் பார்த்தோம். காணியைப் பற்றிய விபரம் வழக்காளிகள் எதிராளிகள் பற்றிய விபரம் லிஸ்பென்டன்ஸ் பிரிவு 12 ஆம் பிரிவின் கீழ் வழக்காளியின் சட்டத்தரணி பிரகடனப்படுத்த வேண்டிய தகவல்கள் 81 ஆம் பிரிவின் கீழ் தரப்பாரது சட்டப் பிரதிநிதிகள் பற்றிய விபரம் என்பன முக்கியமானவையாக இருக்கின்றன எனவும் கண்டோம். இவை அனைத்தும் திருப்தியாக இருக்கின்றன என நீதிமன்றம் கண்டால் பிராதை ஏற்று மேல் செல்லும் நடவடிக்கையை நீதிமன்றம் எடுக்கும். தவறின் நீதிமன்றம் பிராதை ஏற்கமறுக்கலாம். வழக்கு ஆரம்பத்திலேயே சுணங்கி விடும்.

நீதிமன்றம் பிராதை ஏற்றுக் கொண்டால் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கும். லிஸ்பென்டன்ஸ் பதிவுக்காக காணிக் கந்தோருக்கு வழக்கின் இலக்கத்தைக் குறித்து விண்ணப்பத்தை அனுப்பும். மற்றும் இந்த லிஸ்பென்டன்ஸ் உரிய இதழில் பதியுமாறும் பதிந்ததன் பின்னர் ஒரு பிரதியை நீதிமன்றத்திற்கு அனுப்புமாறும் கேட்கும். மேலும் தரப்பாருக்கு ஆரம்ப நில அளவை செய்கின்ற தினத்தையும் அறிவிக்கும். அத்துடன், ஆரம்ப நில அளவைக்கான பணத்தை வழக்காளி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளாரா என்றும் கவனிக்கும். பணம் வைப்பீடு செய்யாத பட்சத்தில் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்யலாம். இவை நடைபெறாவிடின் அதாவது வழக்கை ஏற்றுக் கொண்டால் இனி நீதிமன்றம் ஆரம்ப அளவைக்கான ஆயத்தங்களை

செய்யும். பிரிவிடல் வழக்கில் ஆரம்ப நில அளவை அச்சாணி போன்றதாகும் முக்கியமானதாகும்.

## ஆரம்ப நில அளவை

ஆரம்ப நில அளவை பற்றிய ஏற்பாடுகள் பற்றி பிரிவிடல் சட்டத்தில் 16,17,18,ஆம் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளது. அதன்படி 16 ஆவது 1 ஆம் உப பிரிவில் நில அளவையாளருக்கு பிரிவிடல் காணியை அளப்பதற்கான அதிகாரப்பத்திரத்தை நீதிமன்றம் வழங்க வேண்டும். இந்த அதிகாரப்பத்திரத்தில் காணியை அளக்க வேண்டிய திகதியானது வழக்கின் தரப்பாருக்கு அழைப்பாணையில் குறிக்கப்பட்டுள்ள திகதியை விட 30 நாட்களுக்கு முந்தியதாக இருக்க வேண்டும். மேலும் அளவையின் பின்னர் ஆரம்ப நில அளவை சம்மந்தமான அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்புமாறும் கேட்க வேண்டும். தேவைப்படின் நீதிமன்றம் இவ் அறிக்கையை சமர்ப்பிக்கின்ற திகதியை மேலும் நீட்டலாம். 60 நாட்களுக்கு மேற்படாமல் இத்திகதி நீடிக்கப்படலாம்.

## “அதிகாரப்பத்திரம்”

சாதாரணமாக இந்த அதிகாரப்பத்திரத்தை வழக்காளியின் சட்டத்தரணியே தயாரித்துக் கொடுப்பது வழக்கம். பிரிவிடல் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய இப்பத்திரம் தயாரிக்கப்பட வேண்டும். சாதரணமாக வழக்காளியின் சட்டத்தரணியால் இது தயாரிக்கப்படினும் நீதிமன்றம் இதற்கு பொறுப்பாகும். *உபேரிஸ் எதிர் ஜெயவர்த்தன* என்ற வழக்கில் முன்னாள் பிரதம நீதியரசர் பஸ்நாயக்க அவர்கள் பின்வருமாறு இந்த அதிகாரப்பத்திரம் பற்றி கூறியுள்ளார்.

நிலஅளவையாளர் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறக்கூடாது. வழக்காளி அல்லது வழக்கின் தரப்பார் கூறுகின்றபடி நிலத்தை அளந்து வரைபடத்தை வரைந்து நீதிமன்றத்திற்கு ஒருபோதும் சமர்ப்பிக்கக்கூடாது. அதிகாரப் பத்திரத்தில் அல்லது பிராதில் கூறப்பட்ட அட்டவணையில் உள்ள விபரங்கள் தெளிவாக அளப்பதற்கு போதாவிட்டால் நில அளவையாளர் நீதிமன்றத்திற்கு வந்து நிலமையைக் கூறி மேலும் அறிவுரையைப் பெற வேண்டும். மேலும் ஒரு விடயத்தைக் கூற வேண்டும். அதிகாரப்பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளை தயாரிப்பதில் முதன்நிலை நியாயாதிக்க நீதிபதிகள் தனிப்பட்ட கரிசனை எடுக்க வேண்டும் என்பதாகும். அதிகாரப்பத்திரம் என்பது நீதிமன்றத்தின் ஆவணமாகும். இதனை நீதிமன்ற குமாஸ்தாவோ வேறு எவருமோ தயாரிக்க விட்டுவிட்டு நீதிபதிகள் அதன் அடிப்படையில் வழக்கை கொண்டு நடத்தக்கூடாது. இந்த நில அளவையே வழக்கை தீர்க்கும் ஆயுதம் என்பதை மறக்கக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, நில அளவையாளர் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரப்பத்திரத்தை மிகக் கவனமாகப் படித்து அதன்படி தனது கடமையைச் செய்யவேண்டும். முதலாவதாக தான் அளக்கப்போகும் காணி தனக்கு அளிக்கப்பட்டுள்ள பிராதின் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காணிக்கு முரணானதா? அல்லது அதே காணியா? என்பதை அவர் தீர்மானிக்க வேண்டும். வழக்காளி அல்லது வேறு ஒருவர் கூறுவதை வைத்து அளக்கக்கூடாது.

இச் சந்தர்ப்பத்தில் தற்போது சில மாவட்டங்களில் நிலத்தை அளப்பதற்கு நில அளவையாளர்கள்

கஷ்டப்பட வேண்டும் என்பதையும் இவ்விடத்தில் கூற வேண்டும். நீண்ட காலம் சில பகுதிகள் பாவிக்கப்படாமல் தூர்ந்துபோயுள்ளன. பற்றைகள் நிரம்பியுள்ளன. நிலத்திற்குள் போடப்பட்ட எல்லைக் கற்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. காணியின் அடையாள சின்னங்கள், காணியின் பெயர்கள் என்பன மறக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் ஒரு நில அளவையாளர் இலகுவில் காணியை கண்டுபடித்து அளப்பது கஷ்டம். ஆகவே தெரிந்த ஒருவரது உதவியுடனேயே தான் அளக்கப்போகும் காணியை கண்டுபிடிக்க வேண்டும். இல்லையேல் நில அளவை நாயகத்தின் ஆவணங்களின் உதவியுடனேயே இதனை கண்டுபிடிக்க வேண்டும். இவை கஷ்டமான வேலை என்பதால் வழக்காளியின் அல்லது வழக்குத் தரப்பாரது வழிகாட்டலின் கீழ் காணி அளக்கப்பட சட்டத்தில் இடமில்லை. ஏனெனில் பிராதின் விடயப் பொருளான காணி மாறுபட்டிருப்பின் லிஸ்பென்டன்ஸ் வேறுபடும். இதனால் அந்த வழக்கை கொண்டு நடத்த முடியாது என பல நீதிமன்றத் தீர்ப்புக்கள் உள்ளன. ஆகவே நில அளவையாளர் தான் அளக்கப் போகும் காணி பிராதின் சட்டவரைபில் உள்ள காணிதான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நில அளவையாளர் காணியை அளக்கத் தொடங்கும் போது பிராதில் பெயர் குறிப்பிடப்படாத தரப்பார் அவ்விடத்திற்கு வந்து தமக்கு அக்காணியில் உரிமை இருக்கிறது என்று கூறுவதுண்டு. அவர்களை நில அளவையாளர் ஏற்று நீதிமன்றத்திற்கு வருகை தருமாறு அவர்களுக்கு அறிவித்தல் வழங்க வேண்டும். இவ்வறிவித்தல் அழைப்பாணைக்குச் சமனானதாக கருதப்பட வேண்டும் என சட்டம் கூறுகிறது. அவர்களை ஏற்க மறுக்கக்கூடாது. நீதிமன்றமே அவர்களை பற்றி தீர்மானிக்கும்.

நில அளவையாளர் வழக்கின் தரப்பார் அல்லாதவர்கட்கு நீதிமன்றத்திற்கு வருகை தருமாறு அறிவித்தல் கொடுத்ததற்கு அடையாளமாக அவர்களின் கையொப்பத்தை அல்லது பெருவிரல் அடையாளத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

பின்னர் நீதிமன்றத்திற்கு நில அளவையாளர் சமர்ப்பிக்கும் அறிக்கையில் வழக்கின் தரப்பார் அல்லாதவர்களின் பெயர்கள், விலாசம் என்பனவற்றுடன் அவர்களது உரிமை கோரிக்கை என்ன என்பது பற்றியும் குறிப்பிடவேண்டும். அத்துடன் அறிவித்தல் கொடுத்த தினம் அவர்களது கையொப்பம் என்பனவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய விடயத்தையும் குறிப்பிட வேண்டும். அளக்கும்போது வழக்கின் தரப்பார் இல்லாமல் வேறு பலர் முன்வந்து தமக்கும் அந்தக்காணியில் உரித்து இருக்கிறது என்று கூறுபவர்களை நில அளவையாளர் கவனிக்காது விட்டால் அவர்களது உரிமை பறிபோகும். இதனை காரணமாக காட்டி அவ்வாறு உரிமை பறிபோனவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் சென்று இவ்வழக்கில் தம்மை விட்டுவிட்டு இடைக்காலத் தீர்வையைப் பெற்றவர்களின் தீர்வையை ரத்துச் செய்யுமாறு கோர அவர்களுக்கு சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. ஆகவே காணி அளக்கும் போது யாராவது தமக்கும் உரிமை இருக்கிறது என்று கூறினால் அவர்களை ஏற்கவேண்டும் இல்லையேல் அந்த வழக்கு தீர்வையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்துச் செய்ய இடமுண்டு என்பதாகும்.

சில வேளைகளில் பிராதின் அட்டவணையில் உள்ள காணியின் எல்லைகள் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாக

அளக்கப்போகும் காணியுடன் ஒத்துப்போகும். ஆனால் விசாலம் வேறுபட்டு இருக்கும். அப்படியான சந்தர்ப்பத்தில் நில அளவையாளர் தயாரிக்கும் காணியின் படத்தை நீதிமன்றம் நிராகரிக்க வேண்டும். *பிரம்பி அப்புஹாமி எதிர் மேனிஸ் அப்புஹாமி* என்ற வழக்கில் வழக்காளி தனது பிராதில் காட்டியுள்ள காணியின் விசாலம் 6 ஏக்கராகும். நில அளவையாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள எல்லைகள் கிட்டத்தட்ட அவர் அளக்கப் போகும் காணியின் எல்லைகளுக்கு ஒத்ததாக இருந்தது. ஆகவே நில அளவையாளர் காணியை அளந்தார். ஆனால் விசாலமோ 2 ஏக்கரும் 3 றூட்டுமே இருந்தது. ஆயினும் நீதிமன்றம் அந்த வரைபடத்தை அடிப்படையாக வைத்து இடைக்காலத்தீர்வையை வழங்கியது. மேன்முறையீட்டில் எல்லைகள் கிட்டத்தட்ட ஒன்றாக இருப்பினும் இவ்வளவு விசாலத்தில் வேறுபாடு உள்ளதால் அந்தக்காணிக்கு இடைக்காலத்தீர்வையை வழங்கியது தவறு என்று தீர்த்தது. மீண்டும் வழக்கை விசாரிக்குமாறு தீர்த்தது. இத்தீர்ப்பு பிரிவிடல் வழக்கில் முக்கியமான ஒரு தீர்ப்பாகும்.

இவ்வழக்கை மீண்டும் விசாரிக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட்டது 6 வருடங்களின் பின்னராகும். மேன்முறையீட்டு நீதிமன்றமான உயர் நீதிமன்றம் கூறியது என்னவெனில், இந்த வழக்கு பிழையாக நடப்பதற்கு சகலருமே காரணமாயிருந்தனர் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். மீண்டும் விளங்கும் போது சட்டத்தரணிகள் தரப்பாரிடம் இருந்து பணத்தை பெறக்கூடாது என எதிர்பார்க்கின்றோம். இப்படி மீண்டும் நடைபெற்றால் செலவை தரப்பாரிடமிருந்து அல்ல சட்டத்தரணிகளிடமிருந்து பெற கட்டளையிடப்படும் என நீதிமன்றம் கூறியது. ஆகவே

நில அளவையாளர் அளந்து சமர்ப்பித்த அறிக்கையை கவனமாகப் படித்து நீதிமன்றத்திற்கு அறிவிக்கவேண்டிய கடமையில் சட்டத்தரணிகள் தவறக்கூடாது என்பதை இவ்வழக்கின் தீர்ப்பு எடுத்துக் காட்டுகின்றது. எப்படியோ வழக்கை முடித்து விட வேண்டும் என்ற எண்ணம் இருக்கக்கூடாது.

## நில அளவையாளரின் அறிக்கையில் என்ன அடங்க வேண்டும்?

நில அளவையாளரின் பொறுப்பு பாரியதாகும். ஆயினும் அவரது அளவையே நீதிமன்றத்திற்கு பிரிவிடல் செய்வதற்கு உதவுவதாலும் அவர் தயாரிக்கும் ஆவணம் நீதிமன்ற ஆவணமாக மாறுவதாலும் அவர் மிகக்கவனமாக தனது கடமையை செய்யவேண்டும் என சட்டம் எதிர்பார்க்கின்றது. இதனால் இவர் தனது அறிக்கையில் எவற்றை கூற வேண்டும் என சட்டம் ஏற்பாடுசெய்துள்ளது. பிரிவிடல் சட்டத்தின் 18(1) ஆம் பிரிவில் இது கூறப்பட்டுள்ளது. பின்வரும் தகவல்கள் இருக்க வேண்டும்.

1. வழக்கின் தரப்பாருக்கு நில அளவை பற்றி அறிவித்த திகதி
2. நில அளவை செய்யப்பட்ட காணியின் தன்மை பற்றிய விபரத்தில் பின்வருவன அடங்க வேண்டும்.

அ) கட்டடங்கள்

ஆ) மதில்கள்

இ) வேலிகள், உயிர் வேலிகள்

ஈ) கிணறுகள்

உ) பயிர்கள்

ஊ) வேறும் தேவை உள்ளவை பற்றிய தகவல்கள்

3. நில அளவையாளரின் அபிப்பிராயப்படி பிரிவிடல் செய்ய உள்ள காணியும் பிராதில் குறிக்கப்பட்டுள்ள காணியும் ஒன்று தானா? அல்லது வேறுபட்டதா?

4. அளக்கும் போது சமூகமளித்தவர்கள் விபரம் பிராதில் குறிப்பிடப்படாத யாரும் தமக்கும் இந்தக் காணியில் உரித்துண்டு என்று கூறினார்களா? அவர்களது விபரம் அவர்களுக்கு நீங்கள் அறிவித்தல் வழங்கி நீதிமன்றத்திற்கு வரும்படி கேட்டீர்களா?

5. அளக்க உள்ள காணியை சுட்டிக்காட்டியவர் யாராவது இருப்பின் அவர்களது பெயர்.

இந்த வினாவிற்கான பதில் அவசியம் ஏனெனில் பல வழக்குகளில் வழக்காளியே காணியை சுட்டிக்காட்டுவதும் ஏனையோர் சுட்டிக்காட்டுவதை நில அளவையாளர்கள் புறக்கணிப்பதுமான குற்றச்சாட்டுகள் உள்ளன. வழக்காளிக்கு மேன்மையான இடத்தை நில அளவையாளர் வழங்குவதற்கு காரணம் அவர் அளப்பதற்குரிய பணத்தை வழங்குகிறார் என்ற தப்பான அபிப்பிராயமாகும். இது பற்றி பல வழக்குகளில் வாத, பிரதிவாதங்கள் நடைபெற்றுள்ளன. வழக்காளிகள் ஏனைய தரப்பாருடன் சேர்ந்து அளக்க உதவுவதில் தவறில்லை. இரகசியமாக சோடா வழங்குவதே தவறாகும்.

6. பொதுப்பாதையான வீதிகளில் இருந்து இக்காணிக்கு பயணம் செய்யக்கூடிய விபரம்

7. இந்த வழக்கில் உள்ள காணியை பிரிவிடல் செய்வதற்கு நில அளவையாளர் நீதிமன்றத்துக்கு வழங்கும் உபயோகமான அறிவுரை.

மேற்கூறிய அறிக்கையை நில அளவையாளர் நீதிமன்றத்திற்கு வழங்க வேண்டும். சத்திய உரையுடன் அதனை வழங்க வேண்டும். இரட்டைப் பிரதிகளில் வழங்க வேண்டும். அவற்றுடன் பின்வரும் தகவல்களையும் வழங்க வேண்டும்.

அ) நில அளவையாளரால் காணி அளக்கும் போது அக்காணியில் தெரியக்கூடியதாயிருந்த பிரிவுகளின் எல்லைகள்.

ஆ) நில அளவையாளர் அளந்த காணிக்குள் அரச காணி இருந்தால் அது பற்றிய விபரம்

இ) எழுத்துக்களாலும் இலக்கத்தாலும் அக்காணிக்குள் இருக்கும் கட்டடங்கள், கிணறுகள், மதில்கள் என்பன காட்டப்பட வேண்டும். Lot Lot ஆக காட்ட வேண்டும்.

ஈ) அளக்கப்பட்ட காணிக்குள் உள்ள அடிப்பாதைகள், வெளியுலகத்திற்கு செல்லும் வீதிகள் என்பன காட்டப்பட வேண்டும்.

உ) வேறும் தனது அபிப்பிராயத்தை கூறும் தகவல்களையும் நில அளவையாளர் நீதிமன்றத்திற்கு வழங்கலாம்.

நில அளவையாளர் ஒருவருக்கு இவ்வளவு கட்டுப்பாட்டையும் பாராளுமன்றம் வைத்ததற்கு காரணம் முக்கியமான ஒரு காரியத்தை நீதிமன்றம் செய்வதற்கு அவரது தவறாத உதவி அவசியம் என்பதாலாகும். நில அளவையாளர் காணியை மட்டும் உபகரணங்களால்

அளப்பதில்லை. அவர் சுதந்திரமாக இயங்கவும், ஒரு விடயத்தில் சரியான முடிவை எடுக்கவும், அவரது அபிப்பிராயத்தை வைக்கவும் இடமளிக்கப்பட்டுள்ளது. இவர் வழக்காளியின் இறப்பர் முத்திரை போல் இருக்காமல் நீதிமன்றத்திற்கு உதவுபவராகவே இருக்கிறார் எனலாம்.

நில அளவையாளர் தேவையானால் தனது முதலாவது அறிக்கையை நீதிமன்றத்திற்கு கையளித்து விட்டு பின்னர் வேறு ஒரு திகதியை பெற்று ஏனையவற்றையும் சமர்ப்பிக்கலாம்.

நில அளவையாளர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த அறிக்கை பற்றி சாட்சியம் அளிப்பதற்கு நில அளவையாளரை அழைக்குமாறு வழக்கின் தரப்பார் நீதிமன்றத்தை கேட்கமுடியும். அவ்வாறு கோரிக்கை விடுப்பவர்கள் நில அளவையாளரின் அறிக்கையில் விடுபட்டவற்றை காட்ட இச்சந்தர்ப்பத்தை உபயோகிக்கலாம். நிலஅளவையாளரை அழைக்குமாறு நீதிமன்றத்தை கேட்டால் நீதிமன்றம் அதனை மறுப்பதற்கில்லை. சட்டத்தரணிகளுக்கிடையே நில அளவையாளரின் அறிக்கையில் அபிப்பிராயபேதம் இருப்பின் இச்சந்தர்ப்பத்தில் அதனை தீர்த்துக் கொள்ள வழியுள்ளது.

நிலஅளவையாளரின் அறிக்கை, வரைபடம் என்பவற்றில் தவறு இருப்பதாக கூறுபவர்கள் அதனை நிவர்த்திக்க பிரிவிடல் சட்டத்தில் விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

18 (3) அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ ஆகியவற்றில் அவை காணப்படுகின்றன. நிவர்த்திக்கும் வழிகள் பின்வருபவை ஆகும்.

1. நில அளவையாளரின் அறிக்கையில், வரைபடத்தில் சந்தேகம் இருப்பின் நில அளவை நாயகத்தின் உதவியை பெறலாம்.

2. நில அளவையாளரின் வரைபடத்தை பாவிப்பதற்கு முன்னர் அது சரியானது என நில அளவையாளர் நாயகத்தின் சாட்சியத்தை பெற்றுக்கொள்ளலாம்.

3. சில சந்தர்ப்பங்களில் நில அளவை நாயகத்தின் மூலம் காணியை அளக்கலாம்.

ஆகவே மேலே உள்ளவாறு நில அளவையாளர் பிரிவிடல் வழக்கில் ஒரு முக்கிய விடயத்தை வகிக்கின்றார் எனலாம்.

**சட்டப்பிரதிநிதிகள் நியமனம்**

நியமனம் எவ்வாறு செய்ய வேண்டும் எனில்.

வழக்கின் தரப்பினர் செய்ய வேண்டியவை

**சட்டபூர்வ பிரதிநிதிகளை நியமிக்கும் பெயர் அட்டவணை (81ஆம் பிரிவு)**

.......................மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ........................................

............................வழக்காளி

எதிர்......................எதிராளி மற்றும் எதிராளிகள். வழக்காளி/ எதிராளி/ நில அளவையாளர் மூலம் உரித்து கோரியவர்/ வெளிப்படுத்தப்பட்ட தரப்பார்/ நீதிமன்றத்தின் மூலம் உட்புகுத்தப்பட்ட தரப்பார்/ சேர்ப்பதற்கு/ பதிலீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டவர்கள் ........................ஆகிய நான் இந்த வழக்கின் இறுதித் தீர்வையை வழங்கு முன் இறந்தால் இந்த வழக்கை கொண்டு நடத்த எனது சட்டபூர்வ பிரதி நிதிகளாக,

முன்னுரிமைப்படி

1. ..................
2. ..................
3. ..................

மேலேயுள்ள முன்னுரிமைப்படி அவர்களை நியமிக்கிறேன். மேலும் மேலே கூறப்பட்ட படி நான் இறந்தால் வழக்கைக் கொண்டு நடத்துவதற்காக எனது சட்டப்பிரதிநிதிகளாக மேலேயுள்ள ஒழுங்கின்படி அவர்களை நியமிக்குமாறு இத்தால் வேண்டிக் கொள்கிறேன்.

**சட்டப் பிரதிநிதி செய்ய வேண்டியவை**

……………………வசிக்கும் …………………… ஆகிய நான் மேற்கூறிய நியமனத்திற்கு எனது ………………….ஒப்புதலை தெரிவிக்கின்றேன்

…………..

கையெப்பம்

சட்டப் பிரதிநிதி

**சத்திய உரையை எடுப்பவர் செய்ய வேண்டியவை**

**இந்த ஆ**வணத்தில் உள்ள விபரத்தை தெரிந்து கொண்டு இவ்விபரத்தை தெளிவுபடுத்தியதன் பின்னர் அதனை புரிந்து கொண்டு மேற்கூறியவர் எனது முகதாவில் இவ்வாவணத்திற்கு …………ஆம் ஆண்டு …….. மாதம் …………ஆம் திகதி கையொப்பம் வைத்தார் என சட்டத்தரணி/ சமாதான நீதிவான்/ சத்திய பிரமாண ஆணையாளர் …………….. ஆகிய நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

………..

கையொப்பம்

சட்டத்தரணி, சமாதான நீதிவான்

சத்திய பிரமாண ஆணையாளர்.

1 ஆம் ஆளான சட்டப்பிரதி நிதியைப் போல்

2 ஆம் ஆள்…………………..

3ஆம் ஆள்……………………………

மேற்கூறியவாறு தனித்தனியாக ஆவணத்தை பூர்த்தி செய்ய வேண்டும். இன்னுமொரு வினா என்னவெனில், வழக்காளி உயிருடன் இல்லாமல் தற்போது இறந்திருந்தால் எப்படி சட்டபூர்வ பிரதிநிதியை நியமிக்கலாம் என்பது ஆகும். பிரிவிடல் சட்டம் கூறுவது என்னவெனில் பிரிவிடல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படாத ஏதாவது நடைமுறை தேவையிருப்பின் அதனை சிவில் நடவடிக்கை முறைக்கோவையின் நடவடிக்கையை பின்பற்றி செய்யலாம் என்று கூறுவதால் வழக்காளி இறந்திருந்தால் அவரது பிரதி நிதியாக சிவில் நடவடிக்கை முறைச் சட்டத்தின் பிரிவின் கீழ் உள்ள விதிகளை தழுவி ஒருவரை நியமிக்கலாம். *தியாகராசா எதிர் பெரேரா* என்ற வழக்கில் தீர்மானித்தது போல சட்டப்பிரதி நிதியானவர் நீதிமன்றம் வழக்கைப் பின் போடாமல் தொடர்ந்து நடத்த உதவுகிறாரே தவிர அதாவது வழக்கை தாமதிக்காமல் நடத்த உதவுகிறாரே தவிர வேறு உரிமைக் கோரிக்கை எதனையும் வைக்க முடியாது. மூல வழக்காளியின் எண்ணத்தை மாற்ற முடியாது. அவரது மறுமொழியையோ உரிமை கோரிக்கையையோ மாற்ற முடியாது.

**முடிவுரை**

பிரிவிடல் சட்டத்தின் கீழ் வழக்கு ஒன்றை தாக்கல் செய்து தீர்வையைப் பெற பல வருஷங்கள் செல்லும் என்பது ஒரு தவறான கருத்தாகும். அச்சட்டம் வழக்கின் தரப்பாருக்கும், சட்டத்தரணிகளுக்கும், நில அளவையாளருக்கும், நீதிமன்றத்திற்கும் செய்ய வேண்டியவை எவை என விரிவாக கூறுகின்றது. அவற்றை சட்டத்தில் உள்ள படி ஒவ்வொருவரும் செய்தால் பிரிவிடல் தீர்வை இலகுவில் பெறலாம். இதனை புரிந்துகொள்ளாமல் ஏனைய வழக்குகளான

உரித்து நிறுவல், உடமை நிறுவல், பிரகடன வழக்கு, என்பவை போல் பிரிவிடல் வழக்கையும் நடத்தலாம் என்று கருதி நடத்தினால் அது தவறான வழிக்கு கொண்டு சென்று தீர்வையை சுணக்கும் என்பது உண்மையாகும்.

பிரிவிடல் வழக்கை இலகுவில் தீர்க்க சட்டத்தில் இடமுண்டு. *ரொசலின் எதிர் மேரி ஹாமி* என்ற வழக்கில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பின்வறுமாறு கூறினார். பிரிவிடல் வழக்கில் உள்ள தரப்பார் மத்தியில் அவர்களது உரித்து பற்றி ஒற்றுமை நிலவும் போது நீதிமன்றத்தால் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு. அதாவது சகலருக்கும் குறைபாடு இல்லாமல் அந்த ஒற்றுமை நிலவுகிறதா? என்பதே.

அதன் அடிப்படையில் சகலரும் ஒன்றுபட்டு காணியை பிரித்துக்கொள்ள இடமளிக்கலாம். ஆனால் அது சட்டத்தின் கீழ் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமையை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும். சட்டப்படியானதாக இருக்க வேண்டும்.

சகலரும் அந்தக் காணியைப் பிரிக்கும் ஒப்பந்தத்திற்கு கையொப்பம் இடவேண்டும். சிலவேளை சட்டக் குறைபாடு இருப்பின் ஒருவரது உரிமை பாதிக்கப்படின் அதனை மேன்முறையீடு செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தால் எந்த முறையும் இல்லாமல் அந்த ஒப்பந்தத்தை செய்த கொண்டு நீதிமன்றம் அதை அங்கீகரித்தால் பிரிவிடல் வழக்கை இலகுவில் தீர்க்கலாம் என்றார். நடைமுறையில் சில நீதிமன்றங்கள் இதனை பின்பற்றுவதை நான் தனிப்பட அறிவேன் இது பாராட்டப்பட வேண்டியதாகும்.

## பிரிவிடல் வழக்கு விளக்கம்

பிரிவிடல் வழக்கின் விளக்கம் சம்மந்தமாக அச்சட்டத்தின் 24, 25, ஆம் பிரிவுகளில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. 24 ஆம் பிரிவின் படி வழக்கின் தரப்பாருக்கு அவர்களது உரித்துக் கோரிக்கையை முன்வைக்குமாறு கூறி திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னரும் நில அளவையாளரின் ஆரம்ப நில அளவை அறிக்கை நீதிமன்றத்திற்கு கிடைத்ததன் பின்னரும் பிரிவிடல் வழக்கை விசாரணை செய்வதற்கான ஒரு திகதியை நீதிமன்றம் அறிவிப்பதற்காக அவ்வழக்கை திறந்த நீதிமன்றத்தில் கூப்பிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூப்பிடப்படும் திகதியை அந்த பிரிவிடல் வழக்கில் தமது பெயரை பதிவு செய்துள்ள அனைத்து தரப்பாருக்கும் பதிவுத் தபால் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என்று அப்பிரிவு கூறுகிறது.

24 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவுப்படி பிரிவிடல் வழக்கை விளங்கும் திகதியை திறந்த நீதிமன்றத்தில் அறிவிக்க வேண்டுமென்பதுடன் அந்த திகதியில் வழக்கை விளங்கி தீர்க்க முடியாமல் போனால் அல்லது வேறு காரணங்களால் வழக்கை ஒத்திப் போட வேண்டியேற்றப்பட்டால் மீண்டும் வழக்கு விசாரிக்கப்படும் திகதியை நீதிமன்றம் பகிரங்க நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என்று கூறுகின்றது.

25 ஆம் பிரிவு பிரிவிடல் வழக்கு விளங்குவது பற்றி தெரிவிக்கிறது. அதன்படி நீதிமன்றம் தரப்பினரால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அவர்களது உரித்துக் கோரிக்கையை ஒவ்வொருவர் சார்பிலும் பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கோரிக்கைகளை உறுதிப்படுத்த சாட்சிகளையும் ஆவணங்களையும்

பார்க்கவும் கேட்கவும் வேண்டுமென்றும் கூறுவதுடன் ஒவ்வொருவருக்கும் அந்தக் காணியில் உள்ள உரித்து என்ன? அவர்களது பங்கு என்ன? அல்லது அவர்களுக்கு அக்காணியில் உள்ள தொடர்பு அல்லது சம்மந்தம் என்ன? மேலும் அவர்களது உரித்துடன் அல்லது பங்குடன் தொடர்புடைய சட்டப் பிரச்சினைகள் என்ன? நிகழ்வுப் பிரச்சினைகள் என்ன? என்பதை பற்றி சகலவற்றையும் விசாரித்து அதன்படி தீர்ப்பை வழங்கவேண்டுமென்பதாகும்.

25 ஆம் பிரிவின் 2 ஆம் பிரிவின்படி உரித்துக் கோரிக்கையை முன்வைக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப உரித்துக் கோரிக்கையை முன்வைக்காமல் இருப்போருக்கு எதிராக ஒரு தலைப்பட்சமான விசாரணையை நடத்தலாம் என்று கூறுவது விளக்கத்தின் போது நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறாமல் விளக்கத்தில் ஏதாவது பிரச்சினையை கிளப்புவதற்கும் வழக்கின் விசாரணை பற்றி முறையிடவும் முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது.

25 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின்படி உரித்துக் கோரிக்கையை முன்வைக்காமல் தட்டிக் கழித்த ஒருவர் தனது பெயருக்கான காரணத்தை நீதிமன்றத்திற்கு முன்வைத்து நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொண்டால் வழக்குச் செலவை ஏனையவர்களுக்கு செலுத்தவும் மற்றும் நீதிமன்றத்தின் நிபந்தனைகளுக்கு அமையவும் அவர் உடன்பட்டால் அவரை மீண்டும் வழக்கின் தரப்பாராக நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளலாம் என்கிறது.

## பிரிவிடல் வழக்கு தீர்ப்புக்கள் சில

பிரிவிடல் விளக்கத்தில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விதிகளை நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளில் இருந்து தருகிறேன். பிரிவிடல் வழக்கின் தீர்ப்பு ஆவணங்களின் மேல் கொள்ளப்படும் தீர்ப்பல்ல. அது முழு உலகத்தையும் கட்டுப்படுத்தும் தீர்ப்பாகும். ஆகவே வழக்கை விசாரிக்கும் நீதிபதியின் முக்கிய கடமை என்னவெனில் வழக்காளியினதும் எதிராளியினதும் உரித்தை ஏற்றுக் கொண்டால் மட்டும்போதாது அது தான் வழங்கப் போகும் தீர்ப்புக்கு போதுமானதா? என்று பார்க்க வேண்டும் என்று *நஞ்சிஹாமி எதிர் அந்தரிஸ்* வழக்கில் பர்ன்சைட் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் முதலில் தீர்மானிக்க வேண்டியது என்னவெனில் வழக்காளி தனது உரித்தை நிரூபித்துள்ளாரா? என்பதேயாகும். இதற்கு காரணம் வழக்காளி அதனை நிரூபிக்காவிட்டால் அவரால் அந்த வழக்கை மேற்கொண்டு எடுத்துச் செல்ல முடியாது. ஆகவே சகல நீதிமன்றங்களும் இதனை கவனிக்க வேண்டும் என்று பொன்சோ பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார். *மேதர் எதிர் தாமோதரம்பிள்ளை* என்ற வழக்கில் லேயார்ட் பிரதம நீதியரசர் பின்வருமாறு தீர்ப்பு அளித்துள்ளார். நீதிமன்றத்தின் முன்னுள்ள தரப்பாரில் வழக்காளி கூறுவது என்னவெனில் தான் எதிராளியின் காணியில் உரித்துடையவர் என்பதாகும். கூட்டாக உடமை செய்வதாகவும் கூறுகிறார். இது உண்மையானது என்று நீதிமன்றம் பரிபூரணமாக நம்பினால் ஒழிய தீர்வையை வழங்கக் கூடாது. வழக்காளி தனது உரிமையை நிரூபித்துள்ளார் என்பதை நீதிமன்றம் ஏற்க வேண்டும்.

தவறின் பிரிவிடல் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாகும்.

*சில்வா எதிர் பாவுளு* என்ற வழக்கில் லோரி நீதியரசர் கூறியது என்னவெனில் ''பிரிவிடல் வழக்குகளில் ஒத்துக் கொள்ளப்பட்ட விடயங்களை கொண்டு வழக்கின் தீர்ப்பை வழங்கக் கூடாது. சகல தரப்பாரின் உரித்துக்களை உறுதிப்படுத்தும் சாட்சியங்களை கேட்டுப் பெற வேண்டும். யாருக்காயினும் தனது உரித்தை நிரூபிக்க முடியாவிட்டால் அவருக்கு அந்தக் காணியில் பங்கை கொடுக்கக்கூடாது''.

*குணரத்ன எதிர் கொழும்பு பிசப்* அவர்கள் 32 சட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒத்துக்கொள்ளப்பட்டவைகளில் இருந்து பிரிவிடல் தீர்வையை வழங்கலாம் என்று கூறினால் இப் பிரிவிடல் சட்டத்தை பாராளுமன்றம் நிறைவேற்றக் காரணமாயிருந்த தேவையை நாம் புறக்கணித்தவர்களாவோம். பிரிவிடல் சட்டத்தின் நோக்கம் என்னவெனில் பிரிவிடல் காணியானது உண்மையான உரித்தாளருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இதிலிருந்து தெரிவது என்னவெனில், நீதிமன்றத்திற்கு ஒரு கடமையுண்டு என்பதாகும். தரப்பாரால் ஒத்துக் கொள்ளப்பட்டவற்றை அப்படியே தீர்வையாக எழுதாமல் தான் எழுதுகின்ற தீர்வை உண்மையான உரித்தாளருக்கே உரித்தை வழங்கியுள்ளது என்ற நம்பிக்கையுடன் அத்தீர்வை எழுதப்பட்டுள்ளது என்ற திருப்தியாகும். *யூலியானா ஹாமினி எதிர் டொன் தோமஸ்* என்ற வழக்கின் தீர்ப்பு பின்வருமாறு அமைந்தது. ''பிரிவிடல் வழக்கின் தீர்வை என்பது வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பாரால் தம்மிடையே ஒத்துக் கொள்ளப்பட்டவையல்ல.

அத்தீர்வையானது வழக்கின் விடயப் பொருளில் யார் யாருக்கு உரித்து இருக்கிறது என்று நீதிமன்றம் திருப்திப்படுகின்ற சாட்சியங்களின் அடிப்படையில் எழுதப்படுகின்ற தீர்வையாகும். நீதிமன்றம் இந்த தீர்வையை அறிவித்ததன் பின்னர் எவரும் அதனை மாற்ற முடியாது என்பதால் நீதிமன்றங்கள் விழிப்புடன் இத்தீர்வையை எழுத வேண்டும்.

மேலும் இந்த வழக்கில் தரப்பார் யாராவது ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழ் தனக்கு உரிமை வந்தது என்று கூறினால் அந்த உரிமை வருவதற்கு காரணமாக இருந்த உடமை எப்படிப்பட்டதாக இருந்தது என்று நீதிமன்றத்திற்கு தெளிவாக காட்டுமாறு நீதிமன்றம் அவருக்குக் கட்டளை இட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பிரிவிடல் செய்யக் கோரும் காணியின் கூட்டுச் சொந்தக்காரர்கள் இஸ்லாமியராக இருந்தால் அவர்களது உரித்துப் பங்கைத் தீர்மானிப்பதற்கு இலங்கையின் பொதுச் சட்டமாக உரோம டச்சு சட்டத்தின் கீழ் அதனை தீர்க்கக் கூடாது. இஸ்லாமியரின் பிரத்தியேகச் சட்டமான முஸ்லிம் சட்டத்தின் கீழ் அது தீர்க்கப்பட வேண்டும் என *இஸ்மாயில் லெப்பை எதிர் ஹனிபா* என்ற வழக்கில் தீர்க்கப்பட்டது.

*பீ.எம்.குரே. எதிர் விஜயசூரிய* வழக்கில் நீதியரசர் சின்னத்தம்பி அளித்த தீர்ப்பு முக்கியமானதாகும். ‘‘பிரிவிடல் வழக்கில் வழக்காளி தனது உரித்து வந்த விபரத்தை உரித்துப் பட்டியல் மூலம் தெரிவிப்பது வழக்கம். இதனைக் கொண்ட அவரது உரித்தை அதாவது பல வசதிகளை காட்டி உரித்தை உறுதிப்படுத்த முடியாது. அவர் செய்ய வேண்டிய

இன்னுமொரு முக்கிய காரியம் உண்டு. அதாவது தனக்கு அந்த காணியை விற்றவர் அக்காணியை உரித்து உடையவரிடம் இருந்தே பெற்றார் என்பதையும் அவர் சாட்சியம் மூலம் காட்ட வேண்டும். விளக்கமாக கூறுவதால் பரவணிப் பட்டியலில் உள்ள ஒவ்வொருவருக்கும் அக்காணியின் உரித்து உரித்துள்ளவர்களிடமே இருந்து வந்தது என்று காட்ட வேண்டும். ஆகவே தரப்பார் தமது உரித்தை சந்தேகமின்றி நிரூபித்துள்ளார் என்று நீதிமன்றம் திருப்தி அடைய வேண்டும்''.

மேலும் இவ்வழக்கில் கூறப்பட்டதாவது, ''உரித்துப் பட்டியலில் உள்ளவர்களுக்கும் தனக்கும் உள்ள உறவை நிலைநாட்ட பிறப்பு சாட்சிப்பத்திரம், விவாகச் சாட்சிப்பத்திரம், இறப்புச் சாட்சிப்பத்திரம் என்பனவற்றை சமர்ப்பித்தால் மட்டும் போதாது சாட்சியியல் சட்டத்தின் கீழ் அவற்றை நிரூபிக்க வேண்டும்'' என்று கூறினார் ஆகவே பிரிவிடல் வழக்கு இலகுவான வழக்கல்ல. நீதிமன்றத்தின் பொறுப்பே பாரியது என்று கூறலாம்.

நான் மேலே நீதிமன்றங்களின் தீர்ப்புகளில் சாரத்தை கூறியது இந்த கட்டுரையை நிரப்பவோ அல்லது பிரிவிடல் வழக்கில் எனக்குள்ள அறிவை வெளிக்காட்டவோ அல்ல அதனை கூறியதற்கு காரணம் நீதிமன்றம் சரியான முடிவு ஒன்றை எடுக்க தேவையானவற்றை தரப்பார் நீதிமன்றத்தின் முன்வைத்து விளக்கத்தை நடத்த உதவ வேண்டும் என்பதை காட்டவேயாகும். பிரிவிடல் வழக்குகளின் தீர்ப்புக்கள் பல வருட காலம் சுணங்குவதற்கும் அரைகுறையாக இருப்பதற்கும் அவ்வழக்கைப் பற்றிய அறிவு போதாமையும் ஒரு காரணமாகும் என்பதைக்

காட்டவும் நீதிமன்றத்தில் பிழையில்லை என்பதைக் காட்டவுமேயாகும்.

பிரிவிடல் வழக்கின் விளக்கத்தின் போது ஏற்படும் சில தவிர்க்க முடியாத பிரச்சினைகள் பிரிவிடல் வழக்கின் தீர்ப்பை பெற பல வருடங்கள் செல்வது தவிர்க்கப்பட முடியாது எனவும் கண்டோம். இதனால் இலங்கையின் பல நீதிமன்றங்களில் பிரிவிடல் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்த வழக்கைத் தாக்கல் செய்த வழக்காளி உயிருடன் இல்லாமல் போவதும் அல்லது அவரது உடல் நலமின்மையால் வழக்கை நடத்த முடியாமல் போவதும் நடைமுறையில் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் இறந்த வழக்காளிக்காக அல்லது உடல் நலம் அற்றவர்க்காக சட்டப் பிரதிநிதியொருவர் நியமிக்கப்படுவதுண்டு. அவர் வழக்காளியின் இரத்த உறவால் அல்லது வேறு தனிப்பட்ட காரணங்களால் சட்டப் பிரதிநிதியாக நியமிக்கப்படுகிறார். அவருக்கு தான் தெரிபடப்போகும் அதாவது வழக்காளிக்காகவோ, எதிராளிக்காகவோ தெரிபடப் போகும் தரப்பினரின் உரித்து கோரிக்கை பற்றி ஒன்றும் தெரியாதவராக இருக்கலாம். அல்லது உரித்து பற்றி அவரது சொந்த அறிவுடன் இருக்கலாம். இவர் வழக்காளியின் இடத்திற்கு நியமிக்கப்பட்டு வழக்காளியின் அந்தஸ்தில் இருந்து சாட்சியம் கூறினால் அவரை குறுக்கு விசாரணையில் மறுபகுதியார் நல்லாக மடக்கிவிடுவர். வழக்காளியால் வழக்கிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் விசேடமாக உறுதியில் உள்ள எல்லைகள், நில அளவைப் படம் பற்றிய அறிவு இல்லாமலோ அல்லது வழக்காளி தோல்வியடைவார்.

சில சந்தர்ப்பங்களில் வழக்கை ஆரம்பித்த சட்டத்தரணியும் இறந்துவிடுவதுண்டு அல்லது தரப்பார்

அவரை மாற்றி விடுவதும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் வழக்கின் ஆரம்ப காலத்தில் இருந்து கோவைப்படுத்தப்பட்ட சட்டத்தரணியின் கோவையை கண்டுபிடிக்க முடியாமல் போகும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் வழக்காளி ஆரம்பத்திலும் சமர்ப்பித்த உரித்துக் கோரிக்கையின்படி காணியில் பங்கு கிடைக்காமல் அதை விட சிறு பங்கு கிடைக்க இடமுண்டு. இதனை பெற்றால் வழக்கின் தரப்பாரிடம் இருந்து திட்டு வரவே கிடைக்கும். ஆகவே இத்தகைய பிரச்சினைகள் இருப்பதால் அவற்றையெல்லாம் கவனித்து விரைவாக பிரிவிடல் வழக்கை முடிவுக்குக் கொண்டுவர சட்டத்தரணிகளும் தரப்பாரும் ஒத்துழைக்க வேண்டும். சட்டத்தரணிகளுக்கு சில உபாயங்கள் உள்ளன அவற்றையும் பாவிக்க வேண்டும். இனி இடைக்கால தீர்வையைப் பற்றி பார்ப்போம்.

**இடைக்கால தீர்வை**

பிரிவிடல் சட்டத்தின் 26 ஆம் பிரிவு தீர்வைப் பற்றி கூறுகிறது இதன்படி விளக்கத்தின் முடிவில் நீதிமன்றம் வழக்கின் தீர்ப்பு ஒன்றை எழுதுவதுடன் அந்த தீர்ப்பை திறந்த நீதிமன்றத்தில் கூற வேண்டும். இந்த தீர்ப்பை கூறிய பின்னர் நீதிமன்றம் இடைக்கால தீர்வையை விபரமாக எழுதி அதற்கு கையொப்பமும் இட வேண்டும். இதில் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் வழக்கின் தீர்ப்பு ஒரு தினத்திலும் இடைக்காலத் தீர்வை இன்னும் ஒரு தினத்திலும் இருந்தாலும் இடைக்காலத் தீர்வையை வழங்கியதாக கருதப்படுவது வழக்குத் தீர்ப்புத் திகதியேயாகும். இடைக்காலத் தீர்வையில் பின்வரும் அம்சங்கள் இருக்க வேண்டும் என பிரிவிடல் சட்டத்தின் 26(2) ஆம் பிரிவு கூறுகிறது.

அ) காணி பிரிக்கப்படல் வேண்டும் என்ற தீர்ப்பு,

ஆ) முழு இடமும் ஒன்றாக அல்லது துண்டு துண்டாக பிரிக்கப்பட வேண்டும் என்ற கட்டளை,

இ) காணியின் ஒரு பகுதி அல்லது ஒரு பங்கு விற்கப்பட வேண்டும் அல்லது வேறுபடுத்த வேண்டும் என்ற தீர்ப்பு,

ஈ) காணியில் விசேடமாக ஒதுக்கப்படுகின்ற பகுதி (இருப்பின்)

உ) காணியில் சகலரும் பொதுவாகப் பாவிக்க வேண்டுமென்று காட்டப்படுகின்ற பகுதி,

ஊ) காணியில் விடுபட்ட பகுதி அதாவது ஒதுக்கப்பட்ட பகுதி வேறாக இருக்கவேண்டும்.

எ) காணியில் பிரிக்கப்படாமல் இருக்கவேண்டுமென்று ஏதாவது பகுதியிருந்தால் அது பற்றி கூறவேண்டும்.

மேற்படி வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்புக்கான விபரங்கள் அனைத்தும் 48 1) உப பிரிவின்படி சகலருக்கும் எதிரானதும் இறுதியானதுமான ஒரு முடிவாக கருதப்படும்.

மேற்படி தீர்வையில் அதிருப்தியுறும் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தீர்ப்பு வழங்கிய தினத்தில் இருந்து 14 நாட்களுக்கிடையில் மேன்முறையீட்டு அறிவித்தலையும் 60 நாட்களுக்கு இடையில் மேன்முறையீட்டு விண்ணப்பத்தையும் செய்ய வேண்டும்.

மேற்படி தீர்வை வழங்கப்பட்டதன் பின்னர் அடுத்து நடைபெறும் நடவடிக்கை என்னவெனில் தீர்வையின் படி

காணியை அளந்து குறியீடு செய்யுமாறு நில அளவையாளருக்கு ஆணைப்பத்திரம் வழங்க வேண்டும் காணியை விற்பனை செய்யும் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் விலை மதிப்பீட்டாளருக்கு அதிகாரப்பத்திரம் வழங்குவதாகும்.

காணியை துண்டு துண்டுகளாகப் பிரிக்குமாறு தீர்வை கொடுக்கப்பட்டிருந்தால் ஆரம்ப நில அளவையை செய்த நில அளவையாளருக்கே அதனை இடைக்காலத் தீர்வையின்படி பிரித்து குறியிடுமாறு ஆணைப்பத்திரம் வழங்க வேண்டும். ஆனால் நீதிமன்றம் சில காரணங்களுக்காக வேறு ஒரு நில அளவையாளருக்கு அவ்வாணைப் பத்திரத்தை வழங்கலாம் என பிரிவிடல் சட்டத்தின் 27 (3) பிரிவு கூறுகிறது.

**நில அளவை பற்றி**

மேலே கூறியபடி நில அளவையாளருக்கு ஆணை வழங்கப்பட்டதன் பின்னர் நில அளவையாளர் காணியை துண்டு துண்டாகப் பிரிக்க வேண்டும். இவ்விடத்தில் “காணி” என்பது எதனை என்ற வினா எழும். பிரிவிடல் சட்டத்தின் 83(1) ஆம் பிரிவின் கீழ் இதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. காணி என்பது வழக்கின் பிராதில் குறிப்பிட்ட காணியேயாகும். பிராதின் அட்டவணையில் உள்ள காணியேயாகும் *தம்பையா எதிர் சின்னத்தம்பி* என்ற வழக்கில் பிரிவிடல் வழக்கில் தீர்ப்பு வழங்கும்போது வழக்கின் விடயப் பொருளான காணியை தவிர வேறு காணிகளைச் சேர்த்து தீர்ப்பு வழங்க இடமில்லை என தீர்க்கப்பட்டது. *பியசீலி எதிர் மெண்டிஸ்* என்ற வழக்கில் நீதியரசர் சோமவங்ச கூறுகையில் அறிவுசார் நீதிபதி அவர்கள் அளித்த தீர்ப்பு இரண்டு பக்கங்களை மட்டுமே கொண்டிருப்பதில்

இருந்த வழக்கின் விடயப் பொருளான காணியை கண்டுபிடிக்காததுடன் வழக்கின் தரப்பாரது உரித்துக் கோரிக்கைகளையும் நன்கு கவனிக்கவில்லை என்றே புலப்படுகிறது என்றார்.

நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்வையின்படி நில அளவையாளர் காணியை அளக்க முன்னர் துண்டு துண்டாக பங்கீடு செய்யும் முன்னர் தரப்பாளருக்கு திகதியொன்றை குறித்து அறிவிக்க வேண்டும். குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர் இது அறிவிக்கப்பட வேண்டும். அறிவிக்கப்பட்ட தினத்தன்று நில அளவையாளருக்கு தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று அளக்க முடியாவிட்டால் வேறு ஒரு திகதியை குறிப்பிட நில அளவையாளருக்கு உரிமையுண்டு என சட்டம் கூறுகிறது. அவ்வாறு திகதியை மாற்றும் போது குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னர் தரப்பாருக்கு அறிவிக்க வேண்டும். இந்த அறிவித்தலின் பிரதி ஒன்று துலாம்பரமான இடம் ஒன்றில் அக்காணிக்குள் ஒட்டப்பட வேண்டும்.

காணியை துண்டு துண்டாக Lot Lot ஆக பிரிவிடல் செய்யுமாறு நீதிமன்றம் அதிகாரப் பத்திரம் வழங்கியிருந்தால் அதன்படியே நில அளவையாளர் காணியை அளக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் நில அளவையாளருக்கு அவரது உசிதப்படி அளிக்குமாறு நீதிமன்றம் ஆணையிடலாம் என 1997 ஆம் ஆண்டு பிரிவிடல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. இது ஏனெனில் குறித்த பிரிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்று ஏதாவது பகுதியிருந்தால் பங்காளிக்கு பிரித்துக் கொடுக்குமாறு கூறப்பட்ட பகுதியானது எழுத்திலான மற்றைய சட்டம் ஒன்றுக்கு முரணானதாக இருப்பின் அபிவிருத்திக்கு தடையாக இருப்பின்

அத்தகைய பிரிவை அளவையாளர் மாற்றி பிரிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

நில அளவையாளர் தனக்களிக்கப்பட்ட அதிகாரப் பத்திரத்தின் கீழ் காணியை பங்கீடு செய்து அது பற்றிய நில அளவை படத்தையும் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும். நீதிமன்றம் அந்த நில அளவைப் படத்தையும் அறிக்கையையும் பரிசீலிக்க திறந்த நீதிமன்றத்தில் சகல தரப்பாருக்கும் சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும். அதற்கான ஒரு திகதியை குறிப்பிட்ட தரப்பாருக்கு அறிவிக்க வேண்டும்.

அந்த திகதியானது நில அளவையாளரால் அறிக்கையும் நில அளவைப் படமும் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து முப்பது (30) நாட்களுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

குறித்த தினத்தில் நீதிமன்றம் தக்க முறையில் மேற்படி நில அளவையாளரின் நில அளவைப் படத்தையும் அறிக்கையையும் பரிசீலிக்கும். தரப்பார் அதில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி வேறு ஒருவரைக் கொண்ட நில அளவை படம் தயாரிக்க வேண்டும் என்று கூறினால் நீதிமன்றம் அதற்கு இடம் கொடுக்கும். பின்னர் திருத்தத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட நில அளவைப் படத்தை அவர்கள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

புதிதாக சமர்ப்பிக்கப்பட்ட படத்தில் உள்ள திருத்தங்களை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டால் அதிகாரப் பத்திரம் பெற்றநில அளவையாளரிடம் திருத்தங்களை செய்து அவரது அறிக்கையையும் நில அளவைப் படத்தையும் சமர்ப்பிக்க கோரும்.

இறுதியில் திருத்தங்களுடன் அல்லது திருத்தமில்லாமல் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் தயாரிக்கும் நிலஅளவைப்படத்தை சகலரும் எற்றுக் கொண்டால் அது இறுதி தீர்வைக்குள் உள்ளீர்க்கப்படும்.

இங்கு கவனிக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய விடயம் உண்டு. இறுதித் தீர்வை வெளியிட்டதன் பின்னர் புதிய ஒருவர் அந்த வழக்கில் தன்னைச் சேர்க்குமாறு கோர முடியாது என்பதேயாகும்.

இவ்வாறு பிரிவிடல் வழக்கில் வழக்கின் தீர்வும் பிரிவிடல் தீர்ப்பும் வழங்கப்படுகிறது எனலாம்.

முடிவுரை

பிரிவிடல் வழக்கில் முக்கிய விடயமான நீதிமன்ற விளக்கம் அது தொடர்பான விபரங்களையும் பார்த்தோம். இதனை ஒவ்வொருவரும் விளங்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

இறுத் தீர்வையும் பிரிவிடல் வழக்கில் தெரிந்துகொள்ள வேண்டிய நீதி மன்றத்தீர்ப்புக்களும் மற்றவையையும் பார்ப்போம். இவற்றை புரிந்துகொள்வதன் மூலம் பிரிவிடல் வழக்கின் தன்மையையும் உணர்ந்து அதன்படி செயற்பட வழியும் பிறக்கும்.

## இடைக்கால தீர்வை

பிரிவிடல் வழக்கில் இடைக்கால தீர்வை உட்புகுத்தப்பட்டதன் பின்னர் அடுத்து எடுக்கும் நடவடிக்கை என்னவெனில் இடைக்கால தீர்வையில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி வழக்கின் தரப்பாருக்கு காணியை பிரித்துக் கொடுக்கும் நடவடிக்கையை எடுப்பதாகும். சில சந்தர்ப்பங்களில் சில காணிகளை பொறுத்த வரையில் காணியை துண்டு துண்டாகப் பிரிக்காமல் முழுவதுமாக அல்லது பகுதியாக காணியை விற்கும் தீர்ப்பை நீதிமன்றம் அளிப்பதுண்டு. சில சந்தர்ப்பங்களில் காணியை பிரிக்க கட்டளையிடும் சந்தர்ப்பங்களில் அதாவது காணியை துண்டு துண்டாக பிரிக்கவேண்டும் என்று கட்டளையிடும் இத்தகைய சந்தர்ப்பத்தில் அதனை செயல்படுத்த நில அளவையாளருக்கு அதிகாரப் பத்திரத்தை வழங்குவதாகும். விற்பனைக்கு கட்டளையிடப்படும் சந்தர்ப்பத்தில் விலை மதிப்பாளருக்கு அதிகாரப் பத்திரத்தை வழங்குவதாகும்.

காணியை துண்டு துண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கட்டளையை பெற்ற நில அளவையாளர் அந்தக் கட்டளைக்கு அமைவாக காணியை பிரிக்க வேண்டும். அப்போது காணிகள் பிரிக்கப்படுவது சம்மந்தமாக அரசாங்கம் இயற்றியுள்ள சட்டங்களுக்கு அமைவாக அப்பிரிவு நடைபெற வேண்டும் என 1997 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க பிரிவிடல் சட்டத்தின் உப பிரிவு

தெரிவிக்கிறது. பிரிக்கப்படும் துண்டு ஒன்று மிகச் சிறிதாக இருந்து பொருளாதார அபிவிருத்திக்கு எந்தவகையிலும் உதவாவிட்டால் அத்துண்டு பிரிக்கப்படக்கூடாது. நில அளவையாளர் நீதிமன்றக் கட்டளைகளையும் சட்டத்தின் ஏற்பாடுகளையும் கவனித்து பிரிவிடல் காணியை துண்டு துண்டுகளாக (Lot Lot ஆக)பிரித்தது பற்றியும் இத்துண்டுகள் எந்த எந்த தரப்பாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என தகவலையும் கொண்ட பரிபூரண அறிக்கை ஒன்றையும், சில சந்தர்ப்பங்களில் அத்துண்டுகளில் அபிவிருத்தி செய்தவர்களின் பெயரையும் அந்த அபிவிருத்திக்கு கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும் பற்றிய அறிக்கையையும் நில அளவையாளர் நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும்.

**பிரிக்கப்படும் போது நில அளவையாளர் கவனிக்கவேண்டியவை**

சில காணிகளில் சில பகுதிகள் பொதுவானவையாக இருக்கவேண்டும் என நீதிமன்றம் இடைக்கால தீர்ப்பில் கூறுவதுண்டு. நில அளவையாளர் அதன் படி செயற்பட வேண்டும். அவ்வாறு நீதிமன்றம் கட்டளையிடாத பட்சத்தில் வழக்கின் தரப்பாரது எழுத்திலான கோரிக்கையில்லாமல் காணியில் எல்லோருக்கும் பொதுவான பகுதி என பகுதிகளை பிரிக்கக்கூடாது என பிரிவிடல் சட்டத்தின் 32 (2) ஆம் பிரிவு கூறுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் கூட்டுச் சொந்தக்காரர்கள் தாம் தாம் உடமை செய்யும் பகுதிகளை அபிவிருத்தி செய்வதுண்டு. வீடுகளை அமைத்தும் பயிர் பச்சைகளை வளர்த்தும் அப்பகுதிகளை அபிவிருத்தி செய்வதுண்டு. நீதிமன்றம் இடைக்காலத் தீர்ப்பில் அத்தகைய பகுதிகளை அவ் அபிவிருத்தி செய்த

கூட்டுச்சொந்தக்காரருக்கு கொடுக்க கட்டளையிடலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் நில அளவையாளர் அப்பகுதியை Lot பண்ணும் போது அவர்களுக்கே ஒதுக்க வேண்டும் என பிரிவிடல் வழக்கின் 33 ஆம் பிரிவு கூறுகின்றது. பிரிவிடல் வழக்கில் இது ஒரு முக்கியமான பிரிவு என்பதை மறந்துவிடக்கூடாது. ஆயினும், உயர் நீதிமன்றங்கள் இப்பிரிவின் ஏற்பாடு பற்றி மாறுபட்ட தீர்ப்புக்களை கூறியுள்ளன. *சாஞ்சி அப்பு எதிர் மர்தேயிஸ் அப்பு* என்ற வழக்கில் இரண்டாவது எதிராளி பிரிபடாத காணியில் பொதுவான ஒரு இடத்தில் வீடு ஒன்றைக் கட்டியிருந்தார் நீதிமன்றம் தனது தீர்ப்பில் இந்த வீடு சகல கூட்டுச் சொந்தக்காரருக்கும் உரித்து என்றும் இரண்டாவது எதிராளிக்கு நஷ்ட ஈடு மட்டுமே பெறமுடியும் என்று தீர்ந்தது.

*பிரேமரத்தின எதிர் பெர்னாண்டோ* என்ற வழக்கில் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதியை அபிவிருத்தி செய்த கூட்டுச் சொந்தக்காரருக்கே ஒதுக்க வேண்டும் என்பது உண்மையாயினும் அவ்வாறு ஒதுக்குவதன் மூலம் ஏனைய கூட்டுச் சொந்தக்காரருக்கு மிகப் பாரதூரமான பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அக் கொள்கையை பின்பற்றாமல் விடுவதில் தவறு இல்லை என்று உயர் நீதிமன்றம் கூறியது.

ஆனால், *அல்பட் எதிர் ரத்நாயக்க* என்ற வழக்கில் நீதியரசர் விஜயதுங்க பின்வருமாறு தீர்ப்பு அளித்துள்ளார். அபிவிருத்தி செய்த ஒருவருக்கு நஷ்ட ஈடு வழங்குவதை விட அப்பகுதியை அவருக்கு பிரிவிடல் செய்து (Lot) கொடுப்பதே பிரிவிடல் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் நோக்கமாகும். அதனை அடிப்படையாக வைத்தே நில அளவையாளர்

காணியின் பகுதிகளை (Lot Lot) ஆக பிரித்துள்ளார் என கருதுகின்றேன் இது சரியானதாகும் என்று கூறினார்.

இவ்வாறு எதிரும் புதிருமான தீர்ப்புக்கள் பிரிவிடல் சட்டத்தின் 33 ஆம் பிரிவிற்கு உயர்நீதிமன்றங்களால் வழங்கப்பட்டுள்ளன. அபிவருத்தி செய்த பகுதியை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யவேண்டுமாயின் அபிவிருத்தி செய்தவருக்கே கொடுக்க வேண்டும்.

மேலே கூறிய அனைத்து சட்ட நிலைப்பாடுகளையும் கருத்திற் கொண்டு நில அளவையாளர் தனது இறுதி நில அளவைப் படத்தையும் மற்றும் ஆவணங்களையும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பார். இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட நில அளவைப் படத்தையும் அறிக்கையையும் பரிசீலனை செய்ய நீதிமன்றம் ஒரு திகதியைக் குறிக்கும் இத்திகதியானது நில அளவையாளர் நில அளவைப் படத்தை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த தினத்தில் இருந்து 30 நாட்களுக்கு மேற்பட்ட நாளாக இருக்க வேண்டும்.

### இறுதி நில அளவைப் படத்தின் பரிசீலனை

நில அளவையாளர் சமர்ப்பித்த நில அளவைப் படத்தையும் அறிக்கையையும் நீதிமன்றம் குறித்த தினத்தில் சுருக்க முறையில் விசாரணை செய்யும்.

நில அளவையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் தரப்பாருக்கு நீதிமன்றம் ஒதுக்கிய பகுதிகளில் மாறுபாடு காணப்படின் அபிவிருத்தி சம்மந்தமான அறிக்கையில் அல்லது அதனுடன் தொடர்புடையவற்றில் திருப்தி அடையாவிடின் தரப்பார் நில அளவையாளரின் இறுதிப்படத்தையும்

அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். அதே சமயம் அந்த நில அளவைப் படத்திற்கு மாற்றீடாக அல்லது பதிலீடாக வேறு ஒரு நில அளவைப்படம் தயாரிக்க நீதிமன்றத்திடம் அனுமதி கேட்கலாம். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளிக்கும் பட்சத்தில் புதிதாக தயாரிக்கப்பபட்ட படத்தில் உள்ளபடி சில திருத்தங்களை செய்வது அவசியம் என நீதிமன்றம் திருப்திப்பட்டால் அந்த திருத்தங்களை நில அளவையாளர் ஏற்கனவே சமர்ப்பித்த அவரது நில அளவைப் படத்தில் திருத்தி அல்லது உட்புகுத்தி இறுதி நில அளவைப்படத்தை சமர்ப்பிக்குமாறு கேட்கும்.

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் அந்த திருத்தத்திற்குள்ளான நில அளவைப் படம் இறுதியான படமாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கமைய இறுதித் தீர்வையை நீதிமன்றம் அளிக்கும். இத்தீர்வையில் அதிருப்தியுறும் ஒருவர் மேல் நீதிமன்றத்திடம் மேன் முறையீடு செய்வதற்குரிய அனுமதியைப் பெற்று மேன் முறையீடு செய்யலாம் என 1997 ஆம் ஆண்டு 17ம் இலக்க பிரிவிடல் திருத்தச் சட்டம் கூறுகிறது.

மேன்முறையீடு ஏனைய வழக்குகளைப் போல் கண்டபடி பிரிவிடல் வழக்குச் செய்ய முடியாது. சில விசேட காரணங்களுக்காக மட்டுமே செய்ய முடியும். அவற்றில் முக்கியமானவை உரித்தை நிறுவுவதில் உள்ள குறைபாடுகள் பிரிவிடல் காணிக்கு உரித்தாளர்கள் அனைவரையும் தரப்பினராக் சேர்க்காமை. வில்லங்கங்களுடன் பிரிபடுதல் என்பனவற்றைச் சுட்டிக்காட்டி மேன்முறையீட்டைக் கேட்கலாம். *சிறியா எதிர் அமாலி* என்ற வழக்கில் பின்வரும் காரணத்திற்காக மேன்முறையீடு வழங்கப்பட்டது. எதிராளிக்கு நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களின் கீழ் வழக்கு

விசாரணைக்கு வர முடியவில்லை. நீதிமன்றம் எதிராளிக்கு எதிராக ஒரு தலைப்பட்ட விளக்கத்திற்கு நியமித்து வழக்கின் தீர்ப்பை வழங்கியது. இது தவறு என்றும் வழக்கின் ஏனைய தரப்பாரது சாட்சியத்திற்கு இடம்கொடுக்க வேண்டுமென்ற அடிப்படை சித்தாந்தத்திற்கு இது முரணானபடியால் வழக்கை மேன்மறையீட்டு நீதிமன்றம் மீண்டும் மாவட்ட நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பியது.

மேலும், சட்ட அறிக்கையில் வெளியிடப்படாத வழக்கான *கோட்டகே சோமசிற பெரேரா எதிர் கே மகெலினும் மேலும் ஒன்பது பேரும்* என்ற வழக்கில் (மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு 929/85) பின்வரும் நிலை இருந்ததால் வழக்கை மீண்டும் விசாரிப்பதற்காக மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் தரப்பினர் சிலரின் சட்டப் பிரதிநிதிகள் பதிலீடு செய்யப்படாமலும் பிரிவிடல் வழக்கில் நடவடிக்கை முறையை பின்பற்றாமலும் இடைக்காலத் தீர்வையையும் இறுதித்தீர்வையையும் நீதிமன்றம் வழங்கியது. இதில் அதிருப்தி கொண்ட தரப்பினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தனர். இது மீளாய்வு மூலமே செய்யப்பட்டது. இதனைப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்வையும் இறுதித் தீர்வையும் தவறானவை என்று கூறி மீண்டும் வழக்கை விளங்குமாறு மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பியது

இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உரித்தை பரிசீலனை செய்ததில் குளறுபடி நடந்திருந்தால் வஞ்சக எண்ணத்துடன் தரப்பார் நடந்துகொண்டால், பிரிவிடல் வழக்கு நடவடிக்கைகளை சரியாக பின்பற்றாவிட்டால் தரப்பாருக்கு பிரதிநிதித்துவம் இல்லாதிருந்தால் அத்தகைய சந்தர்ப்பங்களில் இடைக்காலத் தீர்வையும்

இறுதித் தீர்வையும் நீதிமன்றம் வழங்கியிருந்தால் அவற்றை ரத்துச்செய்யலாம் இது மிக அரிதாகவே நடைபெறும்.

**இடைக்காலத் தீர்வை ஒன்றை பிரிவிடல் வழக்கை விசாரணை செய்யும் நீதிமன்றம் எப்போது திருத்தலாம்.**

பிரிவிடல் வழக்கில் இறுதித்தீர்வை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து 30 நாட்களுக்கிடையில் அந்த வழக்கில் வழங்கப்பட்ட இறுதித் தீர்வையை காரணமாக காட்டி அந்த வழக்கின் தரப்பாரது உரித்து மற்றும் சேரவேண்டியவை எல்லாம் கிடைக்காமல் போய்விட்டதாகவும் அதற்கு காரணமாயிருந்தவை பின்வருபவையாக இருப்பின் பிரிவிடல் வழக்கின் 48 (4) ஆம் பிரிவின் கீழ் முன்னைய இறுதித் தீர்வையை புறந்தள்ளி தமது உரித்தை நிரூபிக்க சந்தர்ப்பத்தைத் தருமாறு தரப்பினர் கேட்கலாம். பின்வரும் காரணங்களில் ஒன்று அல்லது பல அத்தகைய கோரிக்கைக்கு காரணமாய் இருக்க வேண்டும்.

அ) வழக்கின் தரப்பாருக்கு அழைப்பாணை வழங்கப்படாமல் இருந்தமை

ஆ) தரப்பார் சிற்றகவையராக அல்லது அங்கக் குறைபாடு உள்ளவராக இருந்து அவர்களை பிரதிநிதித்துவம் செய்ய தகுதியான பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு அவர்களது உரிமைகளை நீதிமன்றின் முன்வைக்காமல் இருப்பின்,

இ) வழக்கின் இறுதித் தீர்ப்புக்கு முன்னர் வழக்கின் தரப்பார் இறந்து போயும் அவர்களுக்கு பதிலாக சட்டப்பிரதிநிதி நியமிக்கப்படாமலும் இருந்து வழக்கின் இறுதித் தீர்வை வழங்கப்பட்டிருப்பின்

ஈ) இந்த வழக்கில் தான் தரப்பராக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்து உரித்துக் கோரிக்கையை முன்வைத்த பின்னர் வழக்கின் விளக்கத்தில் சமூகம் அளிக்க முடியாமல் இருந்தமை என்பனவற்றில் ஒன்று அல்லது பலது காரணமாக இருந்தால் அந்த வழக்கின் தரப்பார் இறுதித் தீர்வையை திருத்துமாறு கோரலாம். இவ்விடத்தில் இறுதித் தீர்வை வழங்கப்பட்ட நாள் எது என்பது பற்றி விக்கிரமரத்ன எதிர் சமரவிக்ரம என்ற வழக்கில் விவாதிக்கப்பட்டு தீர்க்கப்பட்டது. அதன்படி நில அளவையாளர் தனது அறிக்கையை காரியாலத்தில் கையளிக்காது நீதிமன்றத்தில் கையளித்த தினத்தில் இருந்து 30 நாட்கள் என கொள்ளப்பட்டது. 30 நாட்களின் பின்னர் தரப்பார் அந்தக் கோரிக்கையை முன்வைக்க முடியாது. மேற்படி கோரிக்கையை நீதிமன்றத்தின் முன்னர் விண்ணப்பிக்கும் போது அது பெட்டிசமாகவும் (மனுவாகவும்) சத்தய உரையால் அது உறுதிப் படுத்தப்பட்டதாகவும் இருக்கவேண்டும். அத்துடன் தனது கோரிக்கையின்படி தான் முன்வைத்துள்ள கோரிக்கையின் படி எவை எவை திருத்தப்பட வேண்டும் என்றும் அல்லது முழு தீரவையையும் ரத்துச் செய்ய வேண்டுமென்றும் கூறவேண்டும்.

மேற்படி விண்ணப்பத்தை பரிசீலனை செய்ததன் பின்னர் நீதிமன்றம் அதற்கு இடம் அளித்தால் உடனடியாக விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்திற்கான காரணத்துடன் தொடர்புடைய நிகழ்வுகளைப் பற்றியும் சட்டத்தைப் பற்றியும் கூறி அது சம்மந்தமாக வழக்கெழு காரணத்தையும் எழுப்பி அதன் பின்னர் சாட்சியங்களையும் நெறிப்படுத்த வேண்டும். அத்துடன் வழங்ப்பட்ட தீர்வையினால் தான் பாதிக்கப்பட விருப்பதாக கருதும் மற்றைய தரப்பார் சிலரது அல்லது பலரது சட்டத்தரணிகளுக்கும் அறிவித்தல் கொடுக்க

வேண்டும். இக்கோரிக்கைக்கான விளக்கம் பிரிவிடல் சட்டத்தின் நடவடிக்கையின் படியே நடக்க வேண்டும்.

விண்ணப்பதாரி நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த சாட்சிகள், ஆவணங்கள், சமர்ப்பணங்களின் மூலம் அவரது கோரிக்கையில் நியாயம் இருக்கிறது அல்லது சட்டத்தவறு அல்லது நிகழ்வுத்தவறு இருக்கிறது என்று நீதிமன்றம் கண்டால் முன்னர் அளித்த தீர்ப்பை ரத்துச்செய்து வழக்கைத் தள்ளுபடி செய்யலாம்.

பிரிவிடல் வழக்கின் இறுதித் தீர்வை சம்மந்தமாக அதிருப்தியுறும் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்து மேன்முறையீட்டுக்கான அனுமதியைப் பெற்று அதன் பின்னர் மேன்முறையீடு செய்ய வேண்டும் எனவும் கண்டோம். அதேபோல் வழக்கை விசாரித்த நீதிமன்றில் சில திருத்தங்களையும் செய்ய விணணப்பிக்கலாம் எனவும் கண்டோம்.

இவற்றைத் தவிர உயர் நீதிமன்றத்திற்குரிய மீளாய்வு அதிகாரம் அரசியலமைப்பு விதிகளின்படியே உயர் நீதிமன்றத்திற்குண்டு அந்த மீளாய்வு அதிகாரத்தின் கீழும் தரப்பார் உயர் நீதிமன்றத்திற்கு இறுதித்தீர்வையை அல்லது ஏனைய நீதிமன்றங்கள் அளித்த தீர்வையை சவாலுக்கு உட்படுத்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது. மேன்முறையீட்டுக்குரிய நடவடிக்கை முறை சிவில் நடவடிக்கை முறைக்கோவையின் பிரிவுகளின்படி நடக்க வேண்டும்.

**பிரிவிடல் வழக்கு பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை**

பிரிவிடல் வழக்கிற்கு ரெஸ்ஜிடிகாட்டா என அழைக்கப்படும் (தீர்வு கண்ட வழக்கு) சிந்தாந்தம்

இல்லை. பிரிவிடல் வழக்கின் 9 ஆம் 12,29,62,65,70,ஆம் பிரிவுகள் இதனை தடுக்கின்றன.

பிரிவிடல் வழக்கில் வழக்காளிகள் எதிராளிகள் என்ற பிரிவு இருப்பினும் இறுக்கமாகப் பார்த்தால் அப்படிப்பட்ட பிரிவு, பிரிவிடல் வழக்கில் இல்லை. ஏனெனில் வழக்காளி வழக்கைக் கொண்டு நடத்தாவிட்டால் அவ்வழக்கை ஒதுக்கி வைக்க வேண்டிய தேவையில்லை. எதிராளியில் ஒருவரோ பலரோ இணைந்து வழக்கை கொண்டுநடத்தலாம். அவர்கள் வழக்காளிகளாக மாறுவர்.

பிரிவிடல் வழக்கின் தீர்ப்பு அரசைக் கட்டுப்படுத்தாது. ஏனெனில், பிரிவிடல் வழக்கில் கூட்டுச்சொந்தக்காரரே உரித்தை கோருபவர்களாக இருக்கிறார்கள். அந்த வழக்கு உரித்தாளர்களிடையேயே நடைபெறுகின்றது.

ஆகவே அரசு இதில் பங்கு கொள்வதில்லை. பிரிவிடல் வழக்குகளில் அளிக்கப்படும் தீர்ப்பு தரப்பினரை கட்டுப்படுத்தும் தீர்ப்பு அளிக்கும் போது பிராதில் உள்ளவர் ஒருவர் இறந்தால் அவருக்கு அளிக்கப்பட்ட உரித்தானது இறந்தவருக்கு பதிலாக பதிலீடு செய்யப்பட்டவருக்கு உரித்தாகும்.

பிரிவிடல் வழக்கு ஒன்றில் மோசடியாக நேர்மையீனமாக தரப்பார் ஒருவரை வழக்கில் சேர்க்காமல் ஒதுக்கியிருந்தால் அவரை ஒதுக்கியவர் குற்றவாளியாகிறார். சுருக்க விசாரனையின் பின்னர் நீதிவான் அவருக்கு தண்டணை விதிக்க வேண்டும். ஆனால், அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமானால் சட்ட மா அதிபரின் அனுமதி தேவை.

சட்ட மா அதிபரின் அனுமதியுடன் வழக்கைத் தொடர்ந்து அவர் குற்றவாளியானால் நீதிமன்ற அவமதிப்பிற்கும் அவர் குற்றவாளியாவார்.

இவருக்கு விரோதமாக சிவில் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் LXV ஆம் அத்தியாயத்தின் கீழ் வழக்குத் தொடரலாம்.

**இழப்பீட்டுக்கான வழக்கு**

பிரிவிடல் வழக்கில் பங்குத்தாரராக சேர்க்க வேண்டிய ஒருவரை அல்லது பலரைச் சேர்க்காமல் வழக்கை நடத்தி இடைக்காலத்தீர்வையும் இறுதித் தீர்வையும் பெற்று நலமடையும் நபருக்கு எதிராக ஒதுக்கப்பட்டவர் இழப்பீடு கோரி வழக்கைத் தொடரலாம். பிரிவிடல் வழக்கில் 49 ஆம் பிரிவு இதனைக் கூறுகிறது. இந்த வழக்கு இறுதித்தீர்வை வழங்கப்பட்டிருந்த 5 வருட காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். *பெர்னாண்டோ எதிர் பெர்னாண்டோ* வழக்கில் வழக்காளி பிரிவிடல் வழக்கின் தீர்வையை அக்காணி ஈடுவைக்கபட்டுள்ளது என்றும் ஈடுவைக்கப்பட்டவரின் பெயரையும் மறைத்து தீர்ப்பை பெற்றார். வழக்காளிக்கு காணி ஈடுவைக்கப்பட்டது நன்றாகத் தெரியும். ஆயினும் அதனை அவர் மறைத்து வைத்து தீர்வையைப் பெற்றார். நீதியரசர் பேட்ரம் அவர்கள் அளித்த தீர்ப்பில் ஈடுபிடித்தவர் வழக்காளியிடம் இருந்து இழப்பீடு பெற உரித்துள்ளவர் எனத் தீர்த்தார். அதேபோல் பிரிவிடல் வழக்கின் 9 ஆம் பிரிவின் கீழும் சில வகையினர் இழப்பீடு பெற வழக்காளியின் மீது வழக்கு தொடரலாம். நில அளவையாளர் தவறு செய்யும் பட்சத்தில் அந்த தவறு வேண்டுமென்றே சில தரப்பாருடன் சேர்ந்து தவறு செய்யும் பட்சத்தில் பிரிவிடல் சட்டத்தின் 72 ஆம் பிரிவின் கீழ் அவர் மீது

நடவடிக்கை எடுக்கலாம் எனச் சட்டம் கூறுகிறது. நில அளவைப்படம், அறிக்கை மேலும் வழக்கிற்கு உள்வருவோரை தடுத்தல் போன்ற காரணங்கள் அந் நடவடிக்கைக்கு காரணமாக அமையலாம் எனவும் சட்டம் கூறுகிறது.

## பிரிவிடல் சட்டமும் சிவில் நடவடிக்கை முறைச் சட்டமும்

பிரிவிடல் சட்டத்தின் 79 ஆம் பிரிவின் படி பிரிவிடல் வழக்கின் நடவடிக்கை தொடர்பாக அச்சட்டத்தில் ஏற்பாடுகள் எதுவும் இல்லாதபோது சிவில் நடவடிக்கை முறைச்சட்டத்தின் ஏற்பாடுகளில் அதே விடயம் சம்மந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கை முறையை பின்பற்றலாம் என்று கூறப்பட்டுள்ளது. அப்படி பின்பற்றுவதால் பிரிவிடல் சட்டத்தின் மூல நோக்கம் பாதிக்கப்படுகிறது என சில சட்டவியலாளர்கள் கூறுகின்றனர். உயர் நீதிமன்றத் தீர்ப்பானது *விஜயரத்ன எதிர் விஜயரத்ன* (1993 SLR IV o1) வழக்கில் உயர் நீதிமன்றம் பின்வருமாறு கூறுகின்றது.

‘‘சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 120 (1) உப பிரிவுடன் சிவில் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 175 ஆம் பிரிவை சேர்த்துப் பார்க்கும் போது வழக்காளியை எதிராளிக்காக சாட்சியம் கூறுமாறு கட்டாயப்படுத்த முடியாது என தெரிய வருகிறது. ஆனாலும் பிரிவிடல் வழக்கில் நீதிமன்றத்தின் தன்மதி அதிகாரத்தின் கீழ் நீதி வழக்காளியை அல்லாத எதிராளியை மறு தரப்பார் சார்பில் சாட்சியம் கூறுவதற்கு அழைத்தால் அனுமதிக்கப்படலாம் என்றும் இந்த வழக்கில் வழக்காளியை எதிராளியின் சார்பில் சாட்சியம் கூற அழைப்பதற்கு கோரிய விண்ணப்பத்தை நீதிமன்றம் மறுத்தது. தன்மதி அதிகாரத்தை சட்ட வழியில்லாத

முறையில் பாவித்ததாக தாங்கள் கருதுவதாகவும் இதன் மூலம் பிரிவிடல் சட்டத்தின் மூலதர்மம் பாதிக்கப்பட்டதாகவும் நாம் கருதுவதால் பிரிவிடல் சட்டத்தின் 70 ஆம் பிரிவின்படி வழக்கை முறையாக நடத்தவில்லை என தெரிவதால் இந்த வழக்கை ரத்துச் செய்ய வேண்டும் என்பது சரியானதாகும்'' என்றது.

இதனைப் போல் சிவில் நடவடிக்கைச் சட்டக் கோவையின் சில ஏற்பாடுகள் பிரிவிடல் சட்டத்தின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதாக இல்லை என்பது பல தீர்ப்புகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.